விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 079 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 24 வியாழக்கிழமை (07.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கின் பெரும் போர் இன்று ஆரம்பம்

சென்.ஜோன்ஸ் – யாழ்.மத்தி பலப்பரீட்சை



4ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று எண்ணும் சிங்கள இளைஞர்கள் மத்தியில்

### இனவாதத்தை விதைக்கும் சிங்களத் தலைமைகள் – சிறீதரன்



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள போதிலும் சிங்களத் தலைமைகள் அவர்களை இனவாதத்தை நோக்கி திசை திருப்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.


பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களுக்கு இலங்கையினுள் தீர்வு கிடைக்காது என்பதாலேயே தொடர்ந் 15

## சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சக்திகள்

# ஆட்சியிலிருந்து அகற்ற நேரம் பார்த்து காத்திருந்தன

### தனது பதவி விலகல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



(கொழும்பு)

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்தே சில சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சக்திகள் தன்னை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கான நேரம் பார்த்துக் காத்திருந்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தர்மபுரியில் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய வீடுகள்

(தர்மபுரி)

தமிழ்நாடு தர்மபுரி மாவட்டத்தின் இலங்கைத் தமிழர் முகாம்களிலுள்ள 168 பயனாளிகளுக்கு புதிய வீடுகளை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற் 15

## பொலிஸார் மீது சாவகச்சேரியில் தாக்குதல்

### இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய மூவரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் திருட்டில் ஈடுபட்ட 15

## பெறுமதி சேர் வரிச் சட்டமூலம்

# 24 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு 24 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 59 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பெறுமதிசேர் 15

## யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் யாழ்.பல்கலைக்கு விஜயம்



15

## இலங்கை - இந்தியா இடையே எரிசக்தி மற்றும் நில இணைப்பு

### இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா



(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான எரிசக்தி மற்றும் நில இணைப்பு முயற்சிகளை சாத்தியமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் 15

## காற்றின் தரம் மோசம்

### மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் காற்றின் தரம் கடந்த 24 மணி நேரத்தில் மிகவும் மோசமடைந்துள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் இது தொடர்பில் அவதான மாக இருக்குமாறு 15

## சாதாரண தரப் பரீட்சையுடன் பல்கலை செல்லும் வாய்ப்பு

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரத்தின் பின் பரீட்சையொன்றை எதிர்கொள்வதன் ஊடாக அரச பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்கும் முறை தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியதன் பின், பரீட்சை ஒன்றை எதிர்கொள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நல்லாசிகள்




திரு. **கந்தசாமி கண்ணன்**
**SLPS-I**

அவர்கள் பருத்தித்துறை கோட்டக்கல்வி பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவருக்கு எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு உங்கள் சேவைக்காலத்தில் வடமராட்சி பாடசாலைகள் கல்வியில் வளர்ச்சி காணும் என நம்புகிறோம்.

**வளர்க நும்பணி - வாழ்க வடமராட்சி கல்வி**

(C-8486)

கோயில் கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

**நல்லாசி கூறுபவர்**
**கலாநிதி சிவஸ்ரீ**
**நா.கலாதரன்**

## தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

2024 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி அன்று பகல் விசேட பூஜைகளும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியம் 2 மணி தொடக்கம் 5 மணி வரை கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

### நூல் வெளியீடு

### சந்நிதியான் அற்புதங்கள் பாகம் - II

**நூலாசிரியர் : திரு.ந.அரியரத்தினம்**
**இடம் : ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டைமானாறு**
**காலம் : 08.03.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி**
**தலைவர் : உலககுருநாதன் ஐயர் ரமணன் ஐயர்(ஆலய பிரதம குரு)**
**பிரதம விருந்தினர் : திரு.ஈஸ்வரானந்தன் தயாரூபன் (பிரதேச செயலாளர் - கரவெட்டி)**

இந் நிகழ்வில் பங்குபற்றி சந்நிதியானின் திருவருளை பெற்று ஏகுமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பூங்காவன மண்டபத்தில் காலை 11.30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அதனால் வழமைபோல் அன்னதானம் வழங்க விரும்பும் அடியார்கள் எம்மிடம் தொடர்புகளை ஏற்படுத்தி சிறப்பாக அப்பணி தொடர ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் அபிஷேகம், சண்முக அர்ச்சனை, சங்காபிஷேகம், திருமணம் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் அடியார்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**உ.ரமணன்**
**81153646**
**இலங்கை வங்கி,**
**அச்சுவேலி கிளை**
தொடர்புகளுக்கு :
**077 321 7265**
**076 813 8114**
**075 037 5414**

**இங்ஙனம்**
**ஆலய பிரதம குரு**
**க.உலககுருநாத ஐயர்**
**ரமணன் ஐயர்**
**" ஆலய உரிமையாளர்**
**செல்வச்சந்நிதி**
**தொண்டைமானாறு"**

(19379)

## 31 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை அழைப்பு



தோற்றம்
14
04
1946

மறைவு
06
02
2024

சின்னத்துரை சிவகாமிபிள்ளை ஆகியோரின் மகளும் கோபாலன் அமிர்தாம்பிகை ( Royal college ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் சகோதரியாகிய

### அமரர் இராஜசிங்கம் அன்னலட்சுமி

**(ஓய்வுபெற்ற அரசு தட்டச்சு சுருக்கெழுத்தாளர்)**

அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டி கிரியைகள் இன்று (07.03.2024) வியாழக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 09.03.2024 ஆம் திகதி சனிக்கிழமை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் மண்டபத்தில் நினைவஞ்சலியும் மதிய போசனமும் நடைபெறும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவ் அறிவித்தலை அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(19382)

**தகவல் : சகோதரி அமிர்தாம்பிகை**

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிடைவை விற்பனை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 7488 093**

(19381)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்

## ஏல விற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவனையில் இருந்து அகற்றிய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

காலம் : 14.03.2024 (வியாழக்கிழமை)
நேரம் : காலை 10.30 மணி
இடம் : தலைமையகம் வலி தெற்கு பிரதேசசபை, 304, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

### ஏலப் பொருட்கள் விபரம்

இலத்திரனியல்ப் பொருட்கள், அலுவலகப் பொருட்கள், வாகன மின்கலங்கள், உலோகப் பொருட்கள், இரும்புப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், கூரைக்குரிய பனை மரங்கள், நீப்பை மரங்கள் தடிகள், தகரங்கள், சீற்றுகள், கதவுகள், யன்னல்கள், மின்னியல்ப் பொருட்கள், தளபாடப் பொருட்கள், வாகன பழைய பொருட்கள், ரயர்கள் மற்றும் வெற்றுத் தார் பரல்கள்

### நிபந்தனைகள்

01. ஏலவிற்பனைப் பொருட்களை ஏலவிற்பனை தினமன்று காலை 8.30 மணிமுதல் காலை 9.30 மணிவரை பார்வையிட முடியும்.
02. ஏலதாரராக கலந்து கொள்பவர் மு.ப. 10.00 மணிக்கு முன்னர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்தி பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.
03. சித்தியடைந்த ஏலத்தார் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் உடனே செலுத்திப் பொருட்களை அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும். அகற்றப்படாத பொருட்களிற்கு நிர்வாகம் பொறுப்புக் கூறமாட்டாது.
04. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 021 224 0017

**செயலாளர்**
(C-8483) **வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**



நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

**நவ (9) குண்டபக்ஷ நவோத்திர (1008) சகஸ்ர கலசாபிஷேக சண்டீ யக்ஞ் சகித**

## மண்டலாபிஷேக பூர்த்தி பெருவிழா

**08.03.2024**

**அம்பிகை அடியார்களே!**

அலைகடல் சூழ்ந்து தன்னை நாடிவரும் அடியவர்களின் மனக்குறைகளை அகற்றி வேண்டுவார் வேண்டுவனவற்றை வாரி வழங்கி புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் உலக மாதாவாகிய அன்னையின் ஆலயத்தில் நடைபெற்ற புனராவர்த்தன திருப்பணிகள் நிறைவு பெற்று நடைபெற்ற பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தின் பின்னர் நடைபெற்று வரும் மண்டலாபிஷேகத்தின் பூர்த்தி விழா மிகவும் சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற அன்னையின் திருவருள் கைகூடியுள்ளது.

### கிரியா கால நிகழ்வுகள்

**06.03.2024 புதன்கிழமை மாலை 6 மணி முதல்**

விநாயகர் வழிபாடு, வருண பூஜை, அனுஞ்ஞை, பூமி பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், அக்னி உத்பவம், நவாக்னி விபஜனம், மூலமந்திர மாலாமந்தி, திரிசதி நாம ஹோமங்கள், பூர்ணாகுதி, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், தேவி மஹாத்மிய பாராயணம், திருவருட் பிரசாதம் வழங்கல்

**07.03.2024 வியாழக்கிழமை காலை 6.30 மணி முதல்**

விநாயக வழிபாடு, வருண பூஜை, யாகபூஜை, நவாக்கினி பூஜை, தேவி மஹாத்மிய ஹோமம், சதுஷ்ஷஷ்டி உபசார பூஜை, பூர்ணாகுதி தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம்

**மாலை 6 மணி முதல்**

விநாயகர் வழிபாடு, வருண பூஜை, யாக பூஜை நவாக்னி பூஜை, தேவி மஹாத்மிய ஹோமம், சதுஷ்சஷ்டி உபசார பூஜை, பூர்ணாகுதி, தீபாராதனை, தேவ ஸ்தோத்திர திருமுறை பாராயணம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**08.03.2024 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி முதல்**

கணபதி வழிபாடு, வருண பூஜை, யாக பூஜை, நவாக்னி பூஜை, ஸ்ரீ சூக்த ஹோமம், சதுஷ்ஷஷ்டி உபசார பூஜை, பூர்ணாகுதி, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், விஷேட திரவ்விய அபிஷேகம், நவோத்திர சகஸ்ர கலசாபிஷேகம், பூஜை, வசந்த மண்டப பூஜை, உற்சவம் திருவருட் பிரசாதம் வழங்கல்.

**மாலை 6 மணி முதல்**

சாயரட்சை பூஜை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல், மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் அம்பாள் திருவீதியுலா, சண்டேஸ்வரி பூஜை, திருவருட் பிரசாதம் வழங்கல்

**இங்ஙனம்:- அன்னையின் அருட்பணியில்**
**அறங்காவலர் சபையினர்**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

(C-8484)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற் வரிக்கு விலக்கு அளிக்கப்படும்



(கொழும்பு)

எதிர்காலத்தில் வற் வரியை மேலும் குறைக்க எதிர் பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து ள்ளார்.

நேற்று (புதன்கிழமை) பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இதன்படி புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள் மற் றும் மருந்துப் பொருட்களுக்கும் வற் இல் இருந்து விலக்கு அளிக்கப்படும் என எதிர்பார்க் கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் மந்தமாக இருந்த பொருளாதாரம் தற்போது வழ மைக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அது சிரமமானதாக இருந்தாலும், நாளுக்கு நாள் பொருளாதாரம் வலுவடைவதாக குறிப்பிட் டார். (நி-5-6)

# பெரும் ஆபத்தில் இலங்கை அவுஸ்.நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கை பெரும் ஆபத்தில் இருப்பதாகவும் கடனை திருப்பிச் செலுத்தவில்லையென்றால் என்ன நடக்கும் என்பதை நினைத்து கூட பார்க்க முடியாது என்றும் அவுஸ்திரேலிய பொருளாதார நிபுணர்கள் எச்சரித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்தார்.**

அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்து இலங்கை திரும்பிய பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த கருத் துக்களை வெளியிட்டுள் ளார்.

மேலும், அவுஸ்திரேலியா விலுள்ள கன்பரா பல்கலைக் கழகத்தின் பொருளாதார பேராசிரியர்கள் இலங்கை யின் தலை விதி குறித்து ஆச்சரியம் தெரிவித்ததாக வும், ஒரு நாடு எப்படி இத் தகைய நிலையை அடை ந்திருக்க முடியும் என்றும் தம்மிடம் வினவியதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# பேஸ்புக் செயலிழப்பால் 100 மில்லியன் டொலர் இழப்பு

(வோஷிங்டன்)

பேஸ்புக், மெசஞ்சர் மற் றும் இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக ஊடகங்கள் செயலிழந் தமையினால் "மெட்டா" நிறுவனம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் வருமா னத்தை இழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரி விக்கின்றன.

உலகம் முழுவதும் பேஸ் புக், மெசஞ்சர் மற்றும் இன் ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்கள் நேற்று முன் தினம் திடீரென செயலிழந் தன.பேஸ்புக், மெசஞ்சர் மற் றும் இன்ஸ்டாகிராம் அனை த்தும் ஒரே நேரத்தில் செயலி ழந்தது இதுவே முதல் முறை என்றும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

பேஸ்புக், மெசஞ்சர் மற் றும் இன்ஸ்டாகிராம் ஆகிய வற்றின் வீழ்ச்சியைத் தொட ர்ந்து "மெட்டா" நிறுவனத்தின் வருமானம் 1.5 சதவீதம் சரிவடைந்துள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# மீளப்பெறும் மின் இணைப்பிற்கான கட்டணங்களை குறைக்க தீர்மானம்

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின் இணைப்பை மீளப் பெறுவதற்கான கட்டண த்தை 3000 ரூபாயில் இரு ந்து 800 ரூபாயாக குறை க்கப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்து ள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பா ளர் நாயகம் தமித குமார சிங்க நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவிக்கையிலேயே இவ் வாறு தெரிவித் தார்.

மின் இணைப்பு மீள மைக்கப்படும் போது வாடிக்கையாளர்கள் செலுத்த முடியாத தொகையை தவணை முறையில் செலு த்துவதற்கு சந்தர்ப்பம் வழ ங்கப்பட்டுள்ளதாக குறிப்பி ட்டார். (நி-5-6)

# 5000 ரூபா நாணயத்தாள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

5000 ரூபா நாணயத்தாள் கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப்பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ பொது மக்களுக்கு அறிவுறுத்தியு ள்ளார்.

5000 ரூபா போலித் தாள் களை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு ள்ள நிலையில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

சந்தேகநபர் பொத்துஹெர பிரதேசத்தில் 45 போலி 5000 ரூபா தாள்களை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

எனவே நாணயத்தாள்கள் தொடர்பில் அவதானமாக இரு க்குமாறு பொது மக்கள் அறி வுறுத்தப்பட்டுள்ளனர். (நி-5-6)

# 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கண்பரிசோதனை அவசியம்

(கொழும்பு)

50 வயதுக்கும் மேற்பட்ட வர்கள் கட்டாயமாக கண்களை பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

மேலும் உறவினர்களுக்கு குளுகோமா நோய் ஏற்பட் டிருந்தால் அவர்களும் கண் களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமென சுகாதார அமைச்சின் செயலாளர் நிபு ணத்துவ மருத்துவர் பாலித மஹீபால தெரிவித்துள்ளார்.

குளுகோமா நோய் தொட ர்பில் தெளிவூட்டும் ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சமுர்த்தி திட்டம் ரத்து செய்யப்படாது

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

சமுர்த்தி திட்டத்தை எந்த வொரு சந்தர்ப்பத்திலும் ரத்து செய்ய அரசாங்கம் எதிர்பார்க்க வில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இரா ஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், சமுர்த்தி திட்டத்தை மேம்படுத்துவதற்கு விசேட பொறுப்பை எதிர்காலத்திலும் முன்னெடுப்பதாக நிதி இரா ஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டி னார். (நி-5-6)

# சாதனை மாணவர்களுக்கு உலங்கு வானூர்தியில் பயணிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பல் வேறுபட்ட துறையிலும் சாதித்த மாணவர்களுக்கு உலங்கு வானூர்தியில் செல்ல வாய்ப்பு வழங்கப்பட்டது.இலங்கை விமா னப் படையின் 73 ஆண்டு நிறைவை வடக்கு மாகாண த்திலும் யாழ்ப்பாணத்திலும் விசேட நிகழ்ச்சிகள் நேற்று முதல்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனொரு அங்கமாக வட க்கு மாகாணத்தில் கல்வி, விளையாட்டு என பல்வேறுபட்ட துறையிலும் சாதித்த 20 மாண வர்களை உலங்கு வானூர்தி யில் ஏற்றிச் சென்று யாழ்ப் பாணத்தை சுற்றிப் பார்க்க வாய் ப்பு வழங்கப்பட்டது.(நி-5-6-33)




# பாராளுமன்றம் செல்ல ரஹீமினுக்கு தடை

(கொழும்பு)

தங்கக் கடத்தல் விவகாரம் தொடர்பில் அலிசப்ரி ரஹீமின் பாராளுமன்ற வருகை ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்த ப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவர் சமல் ராஜ பக்ஷவினால், 2024 ஜனவரி 24 ஆம்திகதிபாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் இந்த இடைநிறுத்தம் நேற்று முதல் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கின் பெரும்போர் இன்று


சென்ஜோன்ஸ் கல்லூரி


யாழ்.மத்திய கல்லூரி

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையான 117 ஆவது கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நாளை மற்றும் நாளை மறுதினம் என தொடர்ச்சியாக மூன்று தினங்கள் இத் தொடர் இடம்பெறவுள்ளது.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இரு கல்லூரி அணிகளும் மோதுவதால் போட்டிகள் விறுவிறுப்பாக அமையும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.


கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3057

அபிலாஷினி




கோபினா




கஸ்தூரி




சிந்து




வசந்தன்




முகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை திட்டத்தை நிறுத்தக்கோரி மக்களால் ஆவணம் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அதானி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாம் கட்ட காற்றாலை செயற்றிட்டத்தை நிறுத்தக் கோரி மன்னாரில் பல்வேறு கட்ட போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

இந்த நிலையில் மாவட்ட பிரஜைகள் குழுவினர் நேற்று முன்தினம் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் நேரடியாக காற்றாலை செயற்றிட்டத்தை நிறுத்தக் கோரி மக்களின் கருத்துக்கள் எதிர்ப்புக்கள் அடங்கிய ஆவணம் ஒன்றை கையளித்துள்ளதுடன் கடந்த மாதம் முழுவதும் மன்னாரில் காற்றாலைகள் வேண்டாம் என்ற தொனிப்பொருளில் மக்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்து பிரதிகளையும் கையளித்துள்ளனர். (நி-5-6-285)

# மகாசிவராத்திரி அன்று நான்கு யாமமும் ஓதவேண்டிய பதிக எண்களும்-பதிக முதல்வரியும் எல்லோரும் திருமுறைப் புத்தகத்தில் அல்லது தொலைபேசி அலையில் கவனம் எடுத்து ஓதி நாமும் நாடும் நலம் அடைவோம் ஓம் நமசிவாய

**உண்ணாமுலை உமையாளொடும்**
**உடனாகிய ஒருவன்**
**பெண்ணாகிய பெருமான் மலை**
**திருமாமணி திகழ**
**மண்ணார்தன் அருவித்திரள் மழலை**
**முழவு-அதிரும்**
**அண்ணாமலை தொழுவார் வினை**
**வழுவாவண்ணம் அறுமே**

**அண்ணாமலையைத் தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுந்து விழும்**
**ஞான சம்பந்தர்**

சிவபெருமானை வழிபடுவது எல்லாக் காலமும் உகந்தது.ஆனால் சிவராத்திரி அன்று வழிபடுதல் மிகுந்த நன்மைகளைப் பெறலாம் என்பது சான்றோர்கள் அனுபவ அறிவுரையாகும். சிவராத்திரி என்ற சொல்லிற்கு "நன்மையைத் தரும் இரவு" என்பது பொருளாகும். மாத சிவராத்திரி.யோகசிவராத்திரி.பட்ச சிவராத்திரி, நித்திய சிவராத்திரி என்று பல உள்ளன. இவற்றில் மாசி மாதம் தேய் பிறை சதர்த்தசி அன்று வருவது மகா சிவராத்திரி என்று கொள்ளப்படுகிறது.

நான்கு யாமம் என்பது அன்று மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரையிலான 12 மணி நேரக்காலத்தை ஒரு யாமம் மூன்று மணி நேரம் ஆகும்.

சிவபெருமான் சிவசோதிப் பிழம்பாக நின்ற தலம் அண்ணாமலை ஆகும்.

முதலாம் சாமம்

அண்ணாமலைப் பதிகம்

1.முதலாம் திருமுறை- பதிக எண்10- உண்ணா மலை உமையாளொடும் உடன் ஆகிய ஒருவன்

2. பதிக எண் 69- முதல் தமிழ் வேதம் "பூ ஆர்மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்.

திருநாவுக்கரசர் அருளியது திருஅண்ணாமலை தமிழ் வேதம்"

பதிக எண் 4- வட்டனைம்மதி சூடியை வானவர்

பதிக எண் 5- பட்டி ஏறுகத் தேறிப் பல இலம்.

மாணிக்கவாசகர்- சிவபுராணம்- நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க.

இரண்டாம் சாமம் அருச்சனைக்குரிய பாடல்கள்- போற்றித் திருத் தாண்டகம்

55 பதிகம்- "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி"
56 ஆம் பதிகம் - "பொறையுடைய- பூமி நீரானாய் போற்றி"
57 ஆம் பதிகம்- "பாட்டான நல்ல தொடையாய் போற்றி"
5 ஆம் பதிகம் - "எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி"
32 ஆம் பதிகம்-"கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி"
06 ஆம் பதிகம்- "அரவு அணையான் சிந்தித்து அரற்றும் அடிபோற்றி" மற்றும் திருவாசகத்தில் வரும் போற்றிப்பதிகங்கள்.

**போற்றி என்பது வணக்கம்.**

மூன்றாம் காலத்தில் ஓதவேண்டிய பதிகம்

திருநாவுக்கரசர் அருளிய இலிங்க புராணக் குறுந் தொகை- 95 ஆவது பதிகம்

"புக்கணைந்து புரிந்து அலர் இட்புலர் நின்ற"
திருத்தாண்டல்-94
"இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி"
திருத்தாண்டவ-18
"வடியேறு திருசூலந் தோன்றும் தோன்றும்"
திருஞானசம்பந்தர் பதிகம்- ஐந்தெழுத்துப்
இரண்டாம் திருமுறை பதிக எண் 22 பதிகங்கள்
1. துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
2.மூன்றாம் பதிகம்-பதிக எண் 43
காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்வு
3.நான்காம் திருமுறை பதிக எண் -11
சொற்றுணை வேதியன் சோதி வானவன்
4.சுந்தரமூர்த்தி நாயனாரும் பதிக எண்-48
மற்றும் பற்றெனக் கின்றி நின் பாதமேமனம்
பாவித்தேன்.
நான்காம் காலத்தில் ஓத வேண்டிய
மூன்றுகாலம் வழிபாடு செய்து
எம்பெருமானை மறவாமலிருக்க வேண்டுவது
ஓர் பொருத்தமான, அரிய பதிகம்.
1.திருநாவுக்கரசு சுவாமிகள்- அருளியதமிழ் வேதம்
4- 95 வது பதிகம்
"வான் சொட்டச் சொட்ட நின்றட்டும் வளர்மதி யோடலே"
பாவநாசத் திருப்பதிகம் -எண் 15
"பற்றற்றார்சேர் பழம் பதியைப் பாசூர்
நிலாய பவளத்தைச்"

திருஞான சம்பந்தர் அருளிய திரு எழு கூற் றிருக்கை நாம் தீந்தமிழ்ப் பதிகங்களைப் பாராயணம் செய்து வழிபட்டோம் முழுப் பயனையும் நல்கும் படி "எழு கூற்றிருக்கை" முடிவாக ஓதுவோம்.

நலம்பெறுவோம் ஓம் நமசிவாய முதல் பதிகம் எண்- 128

"ஓர் உரு ஆயினை மான் ஆல்காரத்து"
ஓர் சுத்தமான பசு நெய் விளக்கு
ஏற்றி நான்கு யாமங்களிலும் கோயில்
பூசைகளில் கலந்து கொண்டு. பால்.
தயிர், சந்தனம், கரும்பு இளநீர், தேன்
திருநீறு, சமித்துக்கள் சிவாலயங்களில்
கொடுத்து. சிவசிந்தனையுடன் இருப்போம்
திருமுறை பாராயணம் செய்வோம்
நாமும் நலமே பெறுவோம் உலகில் அமைதியே
விளங்கும் "ஓம் நமசிவாய"

உயிர்களாகிய நமக்கு உடல்,உட் கருவி உலகம் நுகர்ச்சி ஆகிய வாய்ப்புக்கள் சிவபெருமான் முத்திப்பேரின் பத்துக்கும், பக்குவப்படுத்துவதற்காகவே,ஆதலால் முன்னோர் காட்டிய அறநெறியை வெளியீடுகளை ஆவணப்படுத்தி மற்றவர்களுடன் பகிர்ந்து சைவ நெறியில் வாழ்வோம் நாடும் நாமும் நலம் பெறுவோம் ஓம் நமசிவாய.



**க.கு.க சிவபாலன்**
**போசகர்**
**காரைநகர் திருத்திண்ணபுர**
**மாணிக்கவாசகர்**
**மடாலயம்.**

(சி-8480)

# இராசிபலன்

07.03.2024
மாசி 24, வியாழக்கிழமை
துவாதசி முன்னிரவு 10.29 மணிவரை

உத்தராடம் முற்பகல் 9.50 மணிவரை
சுபநேரம்-7.54-9.24 மணிவரை
இராகுகாலம் 1.54-3.24 மணிவரை

சந்திராஷ்டமம்:
மிருகசீரிடம்.

**வளவன்**

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**: மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்,ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்**: அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிமையான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி**: தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்,உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்**: வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**விருச்சிகம்**: தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**தனுசு**: நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**: பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் பெருக வழிவகை செய்வீர்கள்.

**கும்பம்**: சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மீனம்**: அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக நடைபெறும், குடும்பத்தினரிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

இறந்தவர் [illegible] ங்காரமாகப் பேசாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம் 6 (2024) மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தர வேண்டிய திகதி தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என பாடசாலை அதிபர் திருமதி இ.முத்துக்குமாரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# திருவாசக அரண்மனையில் சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி திருவாசக அரண்மனையில் மகாசிவராத்திரி தினமான நாளை வெள்ளிக்கிழமை காலை 5 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை அங்கு எழுந்தளி இருக்கும் 108 லிங்கங்களிற்கும் அடியவர்களின் கரங்களால் அபிஷேகம் செய்து கொள்ள முடியும் என செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி ஸ்ரீ நாக ராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் மகோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 23 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# சிவதீட்சை

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சிவதீட்சை வழங்கப்படவிருப்பதாக சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் அறிவித்துள்ளார். (நி-5-6-30)

# கீரிமலை நகுலேஸ்வர ஆலய தேர்த்திருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வர ஆலய தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்தம்ப பூஜையும் ,8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று உள்வீதி திருநடனத்துடன் காலை 10 மணியளவில் தேரிலே ஆரோகணிப்பார்.

இதேவேளை அன்றைய தினம் இரவு சிவராத்திரி விசேட பூஜை வழிபாடுகளுடன் ஆன்மீகம்சார் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (நி-5-6-33)

# சடலத்தை அடையாளம் காண உதவுங்கள்

## வவுனியா பொலிஸார்

(குருமன்காடு)

வவுனியாவில் வயோதிபப் பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளார்.

வவுனியா மருத்துவமனையில் கடந்த நவம்பர் மாதம் 07 ஆம் திகதி புள்ளி நிறச் சட்டையுடன் வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சைபெற அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை குறித்த வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சுமார் 5 அடி உயரமுடைய குறித்த வயோதிபப் பெண் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. குறித்த பெண்ணின் சடலம் வவுனியா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் தொடர்பாக தகவல் தெரிந்தோர் அல்லது உறவினர்கள் வவுனியா மருத்துவமனை அல்லது வவுனியா பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-250)

# வெள்ளம் வழிந்தோடுவதற்கு வடிகால் அமைத்து தாருங்கள்

## இந்துபுர கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் இந்துபுரம் கிராமத்தில் வடிகால்கள் அமைக்கப்படாததன் காரணமாக பெரும் பாதிப்புகளை அக்கிராம மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இந்துபுரம் கிராமத்தில் 450 குடும்பங்கள் வாழ்கின்றன.

இந்துபுரம் கிராமத்தின் ஒவ்வொரு காணிகளுக்குள்ளும் மழை வெள்ளம் தேங்கி நின்று வழிந்தோட முடியாது இருப்பதாகவும் முதன்மை வீதிகள் கடும் சேதங்களை எதிர்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் இந்துபுரம் கிராமத்தில் வெள்ளம் வழிந்தோடி கனகாம்பிகைக் குளத்தினை சென்றடைவதற்கு வடிகால்கள் அமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234 /39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 09 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கான சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு(1/4) பங்கினர் அல்லது 25 பேர் இதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது(09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர்(02) 18 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசியவாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைக்குழு தெரிவு தொடர்பான விபரங்கள்

| தொ இல | கிளையின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பிப்பிலி | 69 | திரு.பா.பாலரவி | 09.03.2021 | மு.ப 10:00 | மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலய மண்டபம். |
| 02 | [illegible] த்துடி | 70 | திரு.த.கண்ணதாஸன் | 09.03.2024 | மு.ப 10:00 | சிவசக்தி சனசமூக நிலைய மண்டபம், சண்டிலிப்பாய். |
| 03 | சீரணி | 71 | திரு.இ.தனுசன் | 09.03.2024 | மு.ப 10:00 | உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபம், சண்டிலிப்பாய். |
| 04 | மாகியப்பிட்டி | 72 | திரு.இ.கஜேந்தன் | 09.03.2024 | மு.ப 10:00 | ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலைய மண்டபம், சண்டிலிப்பாய். |
| 05 | நவாலி | 78 | திரு .க.வக்சன் | 09.03.2024 | மு.ப 10:00 | மதிஒளி சனசமூக நிலைய மண்டபம், நவாலி. |
| 06 | மில்லடி | 79 | திரு.சி.சிவானந்தன் | 09.03.2024 | மு.ப 10:00 | மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயம் மண்டபம். |
| 07 | சுதுமலை | 80 | திரு.இ.வேல்க்குமார் | 09.03.2024 | மு.ப 10:00 | யுவசக்தி சனசமூக நிலைய மண்டபம், [illegible] வீதி, சுதுமலை. |
| 08 | கூழாவடி | 81 | திரு.ஜெ.சதீஸ் | 09.03.2024 | மு.ப 10:00 | மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தலைமைக்காரியாலய மண்டபம். |
| 09 | ஆனைக்கோட்டை | 82 | திரு.அ.வசிகரன் | 09.03.2021 | மு.ப 10:00 | கலைமதி சனசமூக நிலைய மண்டபம், ஆனைக்கோட்டை. |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல.857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

திரு.கிறகோரி சந்திரசேகரன்.
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-84922)

# காலாவதியான குளிர்பானங்கள் காட்சிப்படுத்திய வர்த்தகர்கள்

## ரூ.28 ஆயிரம் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

காலாவதியான குளிர்பானத்தை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த வர்த்தகர்களுக்கு 28 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் பகுதி மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொது சுகாதார பரிசோதகர்கள் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின்போது காலாவதியான குளிர்பான வகைகளை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த இரண்டு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து, இருவரையும் கடுமையாக எச்சரித்த மன்று, ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டமும் மற்றைய நபருக்கு 8 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்தது.

அத்துடன் கைப்பற்றப்பட்ட காலாவதியான குளிர்பானங்களை அழிக்கவும் உத்தரவிட்டுள்ளது. (நி-5-6-33)

# யாழ்.மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நேற்று வட மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர்திரு.பொ.வாகீஷன் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டு இருந்தனர்.

இதன்போது மாவட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதற்கான தீர்வுகள் மற்றும் பிரச்சினைகளை வெற்றி கொண்டு எதிர்கால செயற்பாடுகளுடன் முன்னோக்கிப் பயணித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (நி-5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பள்ளிமுனை மீனவர்கள் போராட்டம்




(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க கோரி குறித்த கிராம மக்கள் நேற்று புதன்கிழமை காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பள்ளிமுனை புனித லூசியா மீனவர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் பள்ளிமுனை மீன் சந்தை கட்டடத் தொகுதிக்கு முன் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்டச் செயலகம் வரை அமைதியான முறையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

இதன் போது பள்ளிமுனை கிராம மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தையும் தமக்கான இடங்களையும் தக்க வைப்பதில் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்தனர்.

தாம் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்கு துரித கதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய தீர்வை வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்திருந்தனர். (நி-5-6-285)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1980 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா: -
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: A/L , (Germany)
எதிர்பார்ப்பு: படித்தவர். அழகிய பெண்
தொ.இ: B/14063

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: -
உயரம்: 6
தகைமை/தொழில்- O/L (Welding)
எதிர்பார்ப்பு:அழகான பெண்
தொ.இ: B/14067

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி.பா: -
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: Bsc (computer Science), Soft ware Engineer
எதிர்பார்ப்பு:பட்டதாரி. படித்த பெண்
தொ.இ: B/14068

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: -17
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:- A/L (France)
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/14069

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1990 - இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா-38 உயரம்: 5
தகைமை/தொழில்: A/L (விவாகரத்தானவர்)
எதிர்பார்ப்பு:தீவுப்பகுதி விரும்பத்தக்கது. விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/14092

பிறப்பு-1989- இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 13 சூரி செவ் 5 இல்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: BSMS (சித்த வைத்தியம்)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14093

பிறப்பு -1993- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி.பா: சூரி செவ் 3 இல்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்:Bsc IT,MBA ,Software Engineer
எதிர்பார்ப்பு: பொருத்தமான தொழில்சார் தகமையுடையோர், வெளிநாடு
தொ.இ: G/14098

பிறப்பு: 1996 - இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா: சூரி செவ் 9 இல் உயரம்: 5
தகைமை/தொழில்: Bsc in IT (Software Engineer)
எதிர்பார்ப்பு: பட்டதாரி (Science,IT). அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14103

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 581/83 எனும் ஆதனம் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் P/02 வழக்கு இலக்கத்தில் பிரிவிடுதல் வழக்கு இறுதித்தீர்வையாக செல்வநாயகம் அந்தோனி அல்ரன் மதுரஇன்னேசியஸ் யுவக்கியாம்பிள்ளை டொமினிக்கும் இன்னும் 9 பேரும் பிரிவிடுதல் உறுதி மூலம் யுவக்கியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் இற்கு வழங்கியுள்ளர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த யுவக்கியாம்பிள்ளை டொமினிக் அல்லது யுவக்கியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ் நொத்தாரிசு A.மரியாம்பிள்ளை முகதாவில் 1979.03.19 ஆம் திகதி 412 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறையில் "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்" என்னும் பெயருடைய விஸ்தீரணம் நெற்பரப்பு 540 கொண்ட ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி.றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 2004.01.15 ஆம் திகதி 2015 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமடைந்ததன் பின்னர் ஏகவாரிசான எனக்கடைந்த பிதாவழி முதுசமும் உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப் படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அற்றோணி திருமதி.எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 2014.10.27 ஆம் திகதி 2213 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியா என்பவர் நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 16.09.2015 ஆம் திகதி 190ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி விக்ரர் கொன்பியூசியஸ் வலன்டைன் இம்மனுவேல் இற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/61 கொழும்புத்துறை இறை, **"அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறைத் தெருத தோட்டம்"** நிலப்பரப்பு 375 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு நிலப்பரப்பு 376 குளி 12.8 இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 222 குளி 3.92 இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/14 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 25 (Lot 25) என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1. இதனை அதே உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 21.12.2014 இல் 6088A -25/14 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் துண்டு 1 (Lot 1) எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்றுக்கும் குறித்த 6088A-25/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்டபடி எல்லை.

கிழக்கு - குறித்த 6088A/14ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 26 எனச் சுட்டப்பட்ட ஆதனம்
வடக்கு - ஆறு மீற்றர் அகலப்பாதை
மேற்கு - குறித்த 6088A/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 24 எனச் சுட்டப்பட்ட ஆதனம்
தெற்கு - குறித்த 6088 A உம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 38 எனச் சுட்டப்பட்ட ஆதனம் இதடங்கலும் இன்னும் இவ் வாதனத்திற்கு வடக்கேயுள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்

தற்போது இவ்வாதனத்தை விக்ரர் கொன்பியூசியஸ் வலன்டைன் இம்மனுவேல் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விக்ரர் கொன்பியூசியஸ் வலன்டைன் இம்மனுவேல் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-8479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ட்ரம்ப் தேர்தலில் நிற்க தடையில்லை-உச்சநீதிமன்றம்



(வோஷிங்டன்)

தேர்தல் வாக்குச்சீட்டில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பெயர் இடம் பெறுவதில் தடை ஏதுமில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2024 இறுதியில் அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

கடந்த 2023 இல் இருந்தே ஜனாதிபதி தேர்தலுக்காக ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் மும்முரமாக பிரச்சாரம் செய்ய தொடங்கியுள்ளனர்.

டொனால்ட் ட்ரம்ப் மீது பல மாநிலங்களில் பல கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

2021 ஜனவரி 6 அன்று, அப்போதைய ஜனாதிபதி தேர்தல்முடிவுகள் வெளியான போது, அமெரிக்க பாராளுமன்ற கட்டடத்திற்கு முன்பாக வன்முறையில் ஈடுபடும்படி தனது ஆதரவாளர்களை தூண்டி விட்டதாக ட்ரம்ப் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கொலராடோ மாநிலத்தில் நடைபெற்ற இந்த விசாரணையில், தேர்தல் வாக்குச்சீட்டில் அவரது பெயர் இடம் பெறக் கூடாது என கொலராடோ நீதிமன்றம் கடந்த ஆண்டு டிசெம்பர் 19 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இதனால் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் உருவாகி இருந்ததுடன், அவருக்கு இது பெரும் பின்னடைவாகவும் கருதப்பட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து ட்ரம்ப் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டார்.

இதனை விசாரித்த நீதிபதிகள், கொலராடோ நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தனர்.

ஜனாதிபதி தேர்தலில் நிற்க தடை விதிக்கும் அரசியல் சட்ட பிரிவை மாநிலங்கள் பயன்படுத்த கூடாது என்றும் மத்திய அரசில் பெரும் பொறுப்பு வகிப்பவர்களுக்கு எதிராகவும் தேர்தல் வேட்பாளர்களுக்கு எதிராகவும் பாராளுமன்றம் மட்டுமே இச்சட்டத்தை பயன்படுத்தலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த தீர்ப்பு குறித்து தனது சமூக வலைதள கணக்கில், "அமெரிக்காவிற்கு பெரிய வெற்றி" என ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். (நி-5-6)

# உக்ரைனின் நட்புநாடுகள் கோழைகளாக இருக்கக் கூடாது

## பிரான்ஸ் ஜனாதிபதி

(பாரிஸ்)

ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பில் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி உக்ரைனின் கூட்டாளிகள் கோழைகளாக இருக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

செக் குடியரசுக்கு, அரசு முறைப்பயணமாக சென்றுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன், அந்நாட்டின் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பேசும்போது, நாம் கோழைகளாக இருக்கக்கூடாது என்னும் ஒரு தருணத்தை நாம் நிச்சயம் எட்டிக்கொண்டிருக்கிறோம் என்று கூறினார்.

உக்ரைனின் நட்பு நாடுகள் போரில் உக்ரைனுக்கு உதவ வேண்டுமென அழைப்பு விடுத்த மெக்ரோன், மேற்கத்திய நாடுகளின் வீரர்கள் உக்ரைனுக்கு ஆதரவாக போரிடுவதற்காக உக்ரைன் செல்வதற்கு தனது ஆதரவையும் உறுதி செய்துள்ளார். மேலும், ஐரோப்பாவில் முடக்கப்பட்டுள்ள ரஷ்யர்களின் சொத்துக்களைக் கொண்டு உக்ரைனுக்கு உதவுவதற்கும் தான் ஆதரவு தெரிவிப்பதாகவும் மெக்ரோன் தெரிவித்துள்ளார்.

ஆனால், செக் குடியரசு மட்டுமல்ல, ஜேர்மனியும் மெக்ரோனின் கருத்தை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. செக் குடியரசின் ஜனாதிபதி, மேற்கத்திய நாடுகள் நேரடியாக போரில் தலையிடுவதன் மூலம் சிவப்புக் கோட்டைத் தாண்டக்கூடாது என்று கூற, ஜேர்மன் பாதுகாப்புத்துறை அமைச்சரோ, மெக்ரோனின் கருத்துக்கள் பயனளிப்பவையாக இல்லை என்றும், உக்ரைனுக்கு வீரர்களை அனுப்புவது தைரியமா அல்லது கோழைத்தனமா என்பதைக் குறித்து விவாதிக்க அவசியமில்லை என தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மேற்கத்திய நாடுகளின் வீரர்கள் உக்ரைனுக்கு ஆதரவாக போரிடுவதற்காக உக்ரைன் சென்றால், அவர்கள் அணு ஆயுதப் போரை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பாதுகாப்பு துறைக்காக நிதியை அதிகரித்த சீனா

(பீஜிங்)

சீனா பாதுகாப்புத் துறைக்கான தனது பாதீடு ஒதுக்கீட்டை 7.2 சதவீதம் அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவுடனும், தாய்வான், ஜப்பான் போன்ற அண்டை நாடுகளுடனும் பதற்றம் அதிகரித்து வரும் சூழலில் தனது இராணுவத்தை மேலும் நவீனமாக்குவதற்காக பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை சீனா அதிகரித்து வருகிறது.

சீன இராணுவத்துக்கு புதிய ஆயுதங்களை வடிவமைப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள், நவீன ஆயுதங்களை பிற நாடுகளிடமிருந்து வாங்குவது ஆகியவற்றுக்காக சீனா செலவிடும் தொகையையும் கணக்கில் கொண்டால் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டதைவிட பல மடங்கு தொகையை சீனா இராணுவத்துக்காக செலவிடுவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே மிக அதிக அளவு தொகையை இராணுவத்துக்காக ஒதுக்கீடு செய்து வரும் சீனா, கடந்த ஆண்டும் இதே அளவுக்கு தனது பாதுகாப்பு பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பாகிஸ்தானில் பனிப்பொழிவு 22 குழந்தைகள் உட்பட 35 பேர் பலி



(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் சில வட்டாரங்களில் திடீர் பனிப்பொழிவு ஏற்பட்டு கனமழை பெய்ததில் 35 பேர் உயிரிழந்ததோடு மேலும் பலர் காயமுற்றதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் 22 பேர் சிறுவர்கள் அவர்களில் பெரும்பாலானவர்களின் வீடுகள் நிலச்சரிவில் புதையுண்டதாகப் பேரிடர் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடக்கு, மேற்குப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான சாலைகளும், வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.


சில மாவட்டங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு அவை இருளில் மூழ்கின. இந்த வாரம் முழுவதும் பாகிஸ்தானின் பெரும்பாலான பகுதிகளில் குளிர், வறண்ட வானிலை நிலவும் என்று வாரந்திர முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான், காஷ்மீரின் மலைப்பகுதிகளில் பனிப்பொழிவு ஏற்படும் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

சிவி

இந்திய

தனது கொ



(மாலே)

மாலைதீவில்

இந்திய இராணு

என மாலைதீவு

தீவிரப்படுத்தியு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...வில் உடையில் கூட
# ...ப இராணுவம் இருக்க முடியாது

### ...காள்கையை தீவிரப்படுத்தும் மாலைதீவு ஜனாதிபதி

**...வில் சிவில் உடையில் உள்ளவர்கள் உட்பட எந்த ...ாணுவ வீரர்களும் தனது நாட்டில் இருக்க முடியாது ...தீவு ஜனாதிபதி முகமது முய்சு தனது கொள்கையை ...தியுள்ளார்.**





முய்சு ஆட்சிக்கு வந்த பிறகு, மாலைத்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையலான தூரம் அதிகரித்தது.

இந்திய இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்ற உத்தரவில், மாலைத்தீவில் உள்ள மூன்று விமானப் படை தளங்களில் செயற்பட்டு வரும் இந்தியப் படைகளை வாபஸ் பெறுமாறு முய்சு முன்பு உத்தரவிட்டிருந்தார்.

ஒரு விமானத் தளத்தில் உள்ள படைகள் மார்ச் 10 ஆம் திகதிக்குள் வெளியேறவும், மற்ற இரண்டு தளங்களில் உள்ளவர்கள் மே 10 ஆம் திகதிக்குள் வெளியேறவும் உத்தரவிடப்பட்டது.

டில்லியில் கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி இது குறித்த உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. மாலைத்தீவும் இந்தியாவின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டது.

இந்தியா திரும்பப் பெறும் படைகளுக்கு பதிலாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்திய தொழில்நுட்பக் குழு கடந்த வாரம் அந்த தீவுகளை சென்றடைந்தது.

ஆனால், மாலைத்தீவில் உள்ள சில எதிர்க்கட்சிகள் புதிய வாதத்தை முன்வைத்துள்ளன.

அங்கு வந்துள்ள தொழில்நுட்ப பணியாளர்கள் உண்மையில் இராணுவ அதிகாரிகள் என்றும் அவர்கள் சிவில் உடையில் அனுப்பப்பட்டனர் என்றும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இதற்கு பதிலளித்த முய்சு "இந்திய படைகளை வெளியேற்றுவதில் எங்கள் அரசு வெற்றி பெற்றுள்ளது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சிகள் புதிய திருப்பங்களை வைக்க முயல்கின்றன.

அப்படியொரு சந்தேகம் வேண்டாம். மே 10-ஆம் திகதிக்குப் பிறகு இந்தியப் படைகள் நாட்டில் இருக்காது. அவர்களை சிவில் உடையில் கூட இருக்க விடமாட்டோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான சர்ச்சையை தூண்டி சீனாவுடன் நெருங்கி வரும் நிலையிலேயே மாலைதீவு ஜனாதிபதி இந்திய விரோத நிலைப்பாட்டை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ரஷ்யாவின் மற்றுமொரு கப்பலை கடுமையாக தாக்கிய உக்ரைன்

(கீவ்)

உக்ரைன் கடற்படையின் சிறப்பு பிரிவான குரூப் 13, ரஷ்யாவின் புதிய ரோந்து கப்பலை கடுமையாக தாக்கி சேதப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.



கருங்கடல் பகுதியில் ரஷ்யாவின் ரோந்து கப்பல் நிறுத்தப்பட்டு உக்ரைனுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த நிலையில், ஜனாதிபதி புடினின் புதிய ரோந்து கப்பலை உக்ரைன் தாக்கி அழித்து உள்ளது.

இதுதொடர்பாக உக்ரைன் நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் நேற்று வெளியிட்ட செய்தியில், ரஷ்யாவின் மற்றொரு கப்பல், நீர்மூழ்கி கப்பலாக மேம்படுத்தப்பட்டு உள்ளது. எனினும், உக்ரைனின் சிறப்பு பிரிவான குரூப் 13, ரஷ்யாவின் ரோந்து கப்பலை தாக்கியது. இதில், ரூ.538 கோடி மதிப்பிலான செர்கெய் கொடோவ் என்ற அந்த கப்பலை, உக்ரைன் கடல் படையின் ஆளில்லா விமானங்களான மகுரா வி5 தாக்கின. இதில், கப்பலின் விளிம்பு பகுதி, வலது மற்றும் இடது புறங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

இனிமையான நாளின் தொடக்கம். வீரர்களே, சிறந்த பணியை செய்திருக்கிறீர் கள் என தெரிவித்து உள்ளது.

இதேவேளை கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் அறுவர் காயமடைந்துள்ளதாகவும் உக்ரைன் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

சர்வதேச மூலோபாய ஆய்வுகளின் சிந்தனைக் குழுவின் கூற்றுப்படி, மோதலின் தொடக்கத்திலிருந்து குறைந்தது 13 ரஷ்ய கடற்படைக் கப்பல்கள் அழிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம், மற்றொரு ரஷ்ய கப்பலான சீசர் குனிகோவ், யால்டா நகருக்கு தெற்கே ஆளில்லா விமான தாக்குதலில் மூழ்கியது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் பங்குனி உத்தரபொங்கல் முன்னாயத்த கலந்துரையாடல்



(கண்டாவளை)

கிளிநொச்சிகரைச்சிபுளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரபொங்கல் நிகழ்வுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் நிகழ்வு எதிர்வரும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் குறித்த பொங்கல் உற்சவத்தின் போது மேற்கொள்ள வேண்டிய போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகள் உள்ளிட்ட பொங்கலின் போது மேற்கொள்ள வேண்டிய விடயங்களின் முன்னாயத்தங்கள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர், ரீ.பிருந்தாகரன், மாவட்ட உதவிச் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட இலங்கை போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து துறையினர், மின்சார சபை உத்தியோகத்தர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள், பொங்கலுடன் தொடர்புடைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் ,ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-315)

# அரசியல் செயற்பாடுகளுக்கு பாடசாலைகளில் தடை

(கொழும்பு)

பாடசாலைகள் மற்றும் பாடசாலை வளாகங்களை அரசியல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு தடை விதிக்கும் அதிகாரத்தை மாகாண ஆளுநர்களுக்கு வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலை மற்றும் பாடசாலை வளாகங்களில் அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாக பல்வேறு தரப்பிடமிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றினை கருத்திற்கொண்டு, அந்த பகுதிகளில் கூட்டங்கள் உள்ளிட்ட அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதனை தடை செய்வதற்கு மாகாண ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 130 | 250 | 210 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 160 | 200 | 175 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 400 | 315 |
| தக்காளி | 250 | 300 | 250 | 400 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 100 | 200 | 140 |
| கோவா | 350 | 350 | 350 | 400 | --- |
| கரட் | 350 | 450 | 400 | 450 | 350 |
| பூசணி | 250 | 140 | 130 | 250 | 175 |
| புடோல் | 180 | 150 | 120 | 200 | --- |
| வாழைக்காய் | 200 | 180 | 120 | 250 | 125 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 400 | 350 | 340 | 400 | 350 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 500 | 280 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 400 | 155 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 | 100 |
| பயற்றங்காய் | 250 | 350 | 150 | 300 | 310 |
| லீக்ஸ் | 350 | 300 | 280 | 400 | 280 |
| பீற்றூட் | 250 | 300 | 300 | 400 | 250 |
| கறிமிளகாய் | 600 | 400 | 320 | 400 | 335 |
| முருங்கைக்காய் | 1200 | 1300 | 600 | 1200 | 1310 |
| போஞ்சி | 300 | 250 | 300 | 600 | 250 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | 240 | --- |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 40 | 100 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 140 | 200 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 110 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 300 | 450 | 300 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 120 | 300 | 150 | 300 | 80 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 60 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 | 100 |

## இன்று ஒரு தகவல் 57



தென்கச்சி கோசுவாமிநாதன்

# இசை மருந்து

இசையே ஒரு மருந்து என்று சொன்னால் நீங்க நம்புவீர்களா? நம்ப மாட்டீர்கள்... சொல்லுபவர்களை சந்தேகமாக பார்ப்பீர்கள்.

இசை விருந்து என்று சொல்லுவது தான் நமது பழக்கம். இசை மருந்து என்று சொன்னாலும் அதில் ஒன்றும் தப்பு இல்லை. இசை என்றால் ஏதோ ஒருத்தர் பாட இன்னொருத்தர் தலையாட்டிவிட்டு போற சமாச்சாரம் மட்டுமில்லை. அதில் நிறைய விடயம் இருக்கிறது.

காஞ்சிப்பன் பாடினால் புண் எல்லாம் சீக்கிரமாக ஆறிப்போய்விடும் என்று சங்க கால புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

அவர்களுக்கு என்ன? ஏதோ ஒரு மூடுலே அப்படி படிவிட்டுப் போய்விட்டார்கள் என்று நினைக்கலாம்.

ஆனால் இப்போது சில டாக்டர்கள் சொல்லுவதைப் பார்த்தால் அவர்கள் எல்லாம் அனுபவத்தை தான் பாட்டிலே சொல்லியிருப்பார்கள் போல இருக்கு. பம்பாயிலே ஒரு டாக்டர். ராமகாந்த் கே.கெனி என்று பெயர்.

இசை மூலமாக இதயநோயை குணப்படுத்திவிடாலாம் என்று சொன்னார். சும்மா சொல்லவில்லை விஞ்ஞான ரீதியாக சொன்னார்.

இசை மூலமாக அவர் சில இதய நோயாளிகளைக் குணப்படுத்தியிருக்கிறார். அது மட்டுமில்லை. சில ஆஸ்துமா நோயாளிகளையும் குணப்படுத்தியிருக்கிறார்.

அப்படி அவர் குணப்படுத்திய நோயாளிகளை நிருபர்களிடம் காட்டினாராம். முற்றிய நிலையிலே இருக்கிற காசநோயைக் கூட இசை மூலமாக குணப்படுத்த முடியும் என்பது நிருபணமாயிருக்கு என்று அவர் சொன்னார்.

பொதுவாக நமக்கு வருகின்ற வியாதிகளுக்கும் மனசுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு. இசையை கேட்கும் போது மனசு லோசாகுது... மனசுக்கு இதமாக இருக்கு... அதனாலே வியாதி குணமாகிறதுக்கும் அது காரணமா இருக்கும் போல இருக்கு.

கடவுளை வணங்குகின்ற போது கண்ணை மூடிக்கொண்டு சில பேர் பாடுகிறார்களே எதுக்காக? கடவுள் இவர் பாட்டை ரொம்ப ரசித்துக் கேட்பதற்காகவா? இவர் பாடுவது இவருக்கே ஒரு மருந்தாகுது. அது தான் காரணம்.

எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவங்க வேண்டுதலை இசை ரூபமாகத்தானே சொல்லுறார்கள்.

கந்த சஷ்டி கவசம், கந்தரனுபூதி, விஸ்ணு சகஸ்ரநாமம், சுப்ரபாதம் – இப்படியெல்லாம் சொல்கிறார்கள் எதற்காக?

இதுக்கெல்லாம் ஆன்மீக காரணங்கள் எதுவாக இருந்தாலும் இதயத்திற்கு இதமாயிருக்கிறது என்பது எல்லோரும் சுலபமாக புரிந்து கொள்ளக் கூடிய ஒரு காரணம்.

யானைக்கு மதம் பிடிக்கிறதல்லவா. அப்படிப்பட்ட மதம் பிடித்த யானை கூட இசைக்கு அடங்கி விடும் என்று தோணுது. ஒரு பெரிய மலை. அங்கே மதங்கொண்ட யானை ஒன்று பிளிறிக் கொண்டே ஓடி வருகிறது.

அது ஏன் ஓடி வருகிறது தெரியுமா?

தினைப்புனத்திலே உள்ள தினைக்கதிரை உண்பதற்காக. அந்த நேரத்திலே தினைபுனத்திற்குக் காவல் செய்யும் ஒரு பொண் நின்று கொண்டு இருந்தாள். கொஞ்ச நேரத்திற்கு முன்னர் தான் பக்கத்திலே உள்ள சுனை நீரிலே நீராடி விட்டு வந்து நிற்கிறாள். நீளமான கூந்தல் ஈரமாக இருக்கு. அதனாலே அதை கோதிக் கொண்டு இருந்தாள். அந்த சிறுபெண் தன்னுடைய கூந்தலைக் கோதிக் கொண்டே ரொம்ப இனிமையான குறிஞ்சிப் பண்ணாகிய தமிழ் இசையை பாடிக்கொண்டே தலைமுடியை காய வைத்துக் கொண்டு இருந்தாள்.

அங்கே ஓடி வந்த யானை இந்த இசையைக் கேட்டது. அவ்வளவு தான். அப்படியே அசையாமல் நின்றது. தினைக்கதிரை உண்ண வந்ததையே மறந்து விட்டது. பசியெல்லாம் மறந்து இசையிலே மயங்கி அந்த யானை அக நானூறுலே இருக்கு அந்தப்பாட்டு

**ஒலியல் வார்மயிர் உளரிணள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சிப் பாடக்**
**குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது**
**படா அப் பைங்கள் பாடுபெற் றொய்என்**
**மறம்புகல் மழகளிறு உறங்கும்**

மயிலும்– பாம்பும் பகை.
யானையும்–சிங்கமும் பகை.
மானும்–புலியும் பகை.

ஆனால் புல்லாங்குழல் இசையைக்கேட்டு இதெல்லாம் பகை மறந்து கூடியிருந்து மகிழ்ச்சியாக இருந்ததாக பெரியபுராணத்திலே ஒரு பாட்டு இருக்கிறது. பகைமையையே மறந்து விட வைத்துவிடுகிறது என்றால் பாருங்கள் இசைக்கு உள்ள சக்தி எப்படிப்பட்டது என்று.

ஒரு கதை தெரியுமா உங்களுக்கு... பத்திரிகையிலே பார்த்தேன்.

ஒரு சங்கீத வித்துவானைப் பற்றி இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவர் சொல்லுகிறார் அதோ இருக்கிறாரே அந்த வித்துவான் பாடினால் நாள் பூரா கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்றார்.

அவ்வளவு நல்லா பாடுவாரா? என்று என்று கேட்டார் இன்னொருவர். அதற்கு அவர் அப்படியில்லை... அவர் ஆரம்பித்தால் அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க மாட்டார். அதனால் தான் அப்படி சொன்னேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான வலுவூட்டல்

சர்வதேச மகளிர் தினம் என்பது உலகில் ஆப்கானிஸ்தான், கம்போடியா, கியூபா, இலங்கை, இந்தியா, மொங்கோலியா உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பெண்களின் சமூக, பொருளாதார, வாழ்வியல் பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெறுவதற்குமானதோர் அடையாளமாக ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 08 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

1975 ஆம் ஆண்டிலிருந்து சில நாடுகளில் சர்வதேச மகளிர் தினமானது ஓர் விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்று 1909 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இன்று செயலிழந்துள்ள அமெரிக்க சோசலிசக் கட்சி முதன் முதலில் பெண்களுக்கு வாக்களிக்கும் சுதந்திரம், வேலைக்கான தகுந்த ஊதியம், குறுகிய வேலை நேரம் போன்ற அடிப்படையான கோரிக்கைகளினை முன்வைத்து அமெரிக்கா முழுவதும் பெண்களைத் திரட்டி அமெரிக்காவில் முதல் முதலில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

ஜேர்மனிய பெண் விடுதலை ஆர்வலர் கிளாரா செக்கினின் முயற்சியால் அமெரிக்காவில் தொடங்கிய தேசிய மகளிர் தினக் கொண்டாட்டங்கள் காலப்போக்கில் ஜேர்மனி, டென்மார்க், சுவிஸ்லாந்து போன்ற ஏனைய நாடுகளுக்கும் பரவியது. இதன் மூலம் தேசிய மகளிர் தினம் சர்வதேச மகளிர் தினமாக வேறுபட்ட மாதங்களில் கொண்டாடப்பட்டது.

எவ்வாறெனினும் 1921 ஆம் ஆண்டு முதல் உலகம் பூராகவும் பங்குனி 08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. சமகால உலகில் மகளிர், பெண்கள், மெல்லினத்தாள் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும் கூட இத்தகைய பதங்கள் பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்கள் வேறுபடுகின்றன. அதே போல் ஆங்கிலத்தில் Female, Women, Girls போன்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டாலும் அவற்றை உயிரியல் ரீதியாக நோக்கின் அவை வேறுபட்ட அர்த்தங்களை உணர்த்துவதாகக் காணப்படுகின்றன.

தமிழர்களின் மிகத் தொன்மையான சங்க இலக்கியங்களில் பெண்ணானவள் இனிமையாகப் பேசுபவளாகவும் மென்மையானவளாகவும் காதல் வயப்படுபவளாகவும் தாய்மையுள்ளம் கொண்டவளாகவும் நோக்கப்பட்டாள். ஆனால் பின்னர் சங்கமருவிய காலத்திலிருந்து இன்று வரை பெண்கள் போதை தரும் போகப் பொருளாகவே நோக்கப்பட்டு வருகின்றனர்.

அறிவு உலகின் தந்தை என அழைக்கப்படும் கிரேக்க தத்துவ மேதையான அரிஸ்டோட்டில் பெண்ணைப் "பூரணத்துவப்படுத்தப்படாத ஆண்" என வரையறுக்கின்றார். உயிரியல் ரீதியாக நோக்கின் "Women" என்பது பாலியல் முதிர்ச்சியினையும் இனப்பெருக்கம் செய்யும் திறனையும் கொண்ட வயது வந்த பெண்களைக் குறிக்கின்றது. "Female" என்பது சந்ததிகளைத் தாங்கக்கூடிய அல்லது முட்டைகளினை உற்பத்தி செய்யக் கூடிய பாலினத்தைக் குறிக்கின்றது. இவ்வாறாக பதங்களுக்கு இடையே வேறுபாடு நோக்கப்படுகின்ற அதே சமயம் விஞ்ஞானத்தினதும், அறிவியலினதும் விந்தையின் விளைவாக நவீன உலகில் ஆண் பெண்ணாக மாறுவதும் பெண் ஆணாக மாறுவதும் பெண் குறித்த முன்னைய நோக்கல்களில் பிறழ்வுத் தன்மை ஏற்பட வழிவகுக்கின்றது. Oxford ஆங்கில அகராதியில் பெண் குறித்து திருத்தம் செய்யப்பட்ட வரைவிலக்கணமானது "பிறக்கின்ற




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

போது வேறு பாலினத்தைக் கொண்டிருந்தாலும் தன்னைப் பெண்ணென அடையாளப்படுத்தி பெண்ணாக வாழ்வோர் அனைவரும் பெண்கள்" என குறிப்பிடுகின்றது. பெண் என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துதலே சர்ச்சைக்குரியதாகவும் சவால் நிறைந்ததாகவும் இருக்கிறது. இக் காலத்தில் பெண்களும் பல்வேறு வகையான சவால்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.


2015 ஆம் ஆண்டு UN இல் அங்கத்துவம் வகிக்கின்ற 195 நாடுகள் ஒன்று சேர்ந்து உலகம் முழுவதும் நிலைபேண்தகு அபிவிருத்தியினை அடைந்து கொள்ள வேண்டும் என்கின்ற நோக்கில் 17 இலக்குகளினை முன்வைத்தது. உலக நாடுகள் நிலைபேண்தகு இலக்குகளை நோக்கிப் பயணிக்கின்றன.

இதில் 5 ஆவது இலக்கு பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதலினை வலியுறுத்துகின்றது. அதாவது இவ் இலக்கு பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டல் மற்றும் அதில் உள்ள பிரச்சினைகளில் அதிக கவனம் செ[illegible] கூறின் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருதலே இவ் இலக்கின் அடிப்படை நோக்கமாகும்.

இலங்கை உட்பட்ட பெரும்பாலான உலகின் வளர்முக நாடுகளில் நிலைபேண்தகு அபிவிருத்தியினுடைய யதார்த்தமானது சற்று விவாதிக்கப்படக்கூடிய பொருளாகவே காணப்படுகின்றது. இலங்கையில் நடைபெற்ற கொடிய உள்நாட்டு யுத்தமும் அதன் பின்னரான இலக்குகள் நிர்ணயிக்கப்படாத அபிவிருத்தியும் அபிவிருத்தி குறித்த தெளிவு இன்மையும் காணப்படுவதால் அது விவாதிக்கப்பட வேண்டியதொண்டாகவே காணப்படுகின்றது. அரசியல் பொருளாதார ஸ்திரமின்மை, புவியியல்சார் பொருளாதார - அரசியல் அழுத்தங்கள், முடிவுறாத உள்நாட்டு தமிழர் பிரச்சினைகள், அரசியல் தீர்வு குறித்த தமிழர் கோரிக்கைகள், இவையனைத்தும் பொருளாதார அபிவிருத்திக்கான நிஜமான தடைகளாக உள்ளமையால் நிலைபேண் பொருளாதாரம் பற்றிய எண்ணவோட்டத்தின் உண்மைத்தன்மை கற்பனையோ, கானல்நீரோ என்ற சிந்தனை இலங்கை வாழ் மானிடத்தில் நிலைத்திருக்கவே வழி செய்கிறது.

இலங்கையினை ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மகளிர் நல அபிவிருத்தித் திட்டங்கள் சிறப்பாகவே உள்ளன. ஆனால் பாலின சமத்துவம் என்கின்ற பொழுது உலகளாவிய ரீதியில் பாலின சமத்துவமின்மையினை சுட்டிக் காட்டுகின்ற பாலின சமத்துவமின்மைச் சுட்டியின் பிரகாரம் இலங்கையானது 159 நாடுகளில் 92 ஆவது இடத்தில் உள்ளது. மேலும் இலங்கையில் 3.5 வீதமான பாராளுமன்ற உறுப்பினர்கள் பெண்களாகவே உள்ளனர்.

உலகின் முற்போக்குவாத சிந்தனைகளையுடைய, அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற அபிவிருத்தி அடைந்த நாடுகள் எனப் போற்றப்படுகின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகள் அனைத்திற்கும் இல்லாத அரசியல் வரலாற்று[illegible]ானது இலங்கைக்கு



பேராசிரியர் சி.சிவேசன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மட்டுமே உள்ளது. அது எதுவெனில் உலகின் முதலாவது பெண் பிரதமரும் உலகின் முதலாவது பெண் ஜனாதிபதியும் இலங்கை நாட்டைச் சேர்ந்த பெண்களே. அதிலும் விந்தை என்னவெனில் அவர்கள் இருவருக்குமிடையேயான உறவு தாய்-சேய் உறவாகும்.

இலங்கையில் பெண்கள் எதிர்நோக்குகின்ற மிக முக்கியமான பிரச்சினைகளில் முதன்மையானது பொருளாதார வலுவின்மையாகும். அதாவது பெண்கள் பொருளாதர ரீதியாக ஆண்களில் தங்கியிருக்கின்ற சார்புநிலைத் தன்மையாகும். மேலும் சமூகப் பாதுகாப்பின்மை, கல்விக்குத் தகுந்தாற் போல் வேலையின்மை, குடும்ப வன்முறைகளினால் பாதிப்புக்குள்ளாகின்ற நிலை, பெண்களுக்கான போதியளவு சட்ட ஆலோசனை வழங்குவதற்கான நிறுவன ரீதியான கட்டமைப்புகளின் பற்றாக்குறை, பெண்ணியம் குறித்தும் பெண்ணின் மென்மை குறித்தும் பெண்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற குறைந்த விழிப்புணர்வுகள், ஆண்கள் தம்மைக் கட்டியாள்வதற்காகவே படைக்கப்பட்ட உயிரினம் என்ற பெண்களின் பிற்போக்குச் சிந்தனைகள் நடைமுறை இலங்கையில் பெண்கள் எதிர்நோக்குகின்ற சவால்களாகும்.

இத்தகைய சவால்களினைப் பெண்கள் முறியடித்து தம்மை சமூகத்தில் நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமாயின் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நடத்துகின்ற எழுச்சிகரமான மகளிர் தின நிகழ்வுகளோ, பெண் எழுச்சி மாநாடுகளோ, "பெண் அடிமைத்தனத்தின் விலங்கினை உடைக்கிறோம். அல்லது ஆண் ஆதிக்கத்தினை அறுக்கிறோம்" என்ற சுலோகங்கள் தாங்கிய பாதாதைகளுடனான ஊர்வலங்களோ, அல்லது திட்டமிடப்படாதும், நிறுவனமயமாக்கப்படாதுமான சிறிய அளவிலான மகளிர் முன்னேற்ற திட்டங்களோ, நீண்ட காலத்தில் பெண்களின் வாழ்வாதாரத்தினையும் வாழ்க்கை முறைகளையும் மேம்படுத்த வல்லவை அல்ல.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 425





ஆனால் உடனே புறப் பட்டுப் பழையாறைக்கு வரும் படி எழுதி அனுப்பியிருக்கி றார். என் தமையனாரோ காஞ்சிக்கு வரும்படி இவரி டம் கூறி அனுப்பியுள்ளார். சேநாதிபதி! தங்களுடைய கருத்து என்ன?" என்றார்.

"இளவரசே! இன்று காலை வரையில் தாங்கள் இந்த இலங்கைத் தீவிலேயே இருக்க வேண்டும் என்ற கருத்து டனேயே நான் இருந்தேன். நேற்றிரவு கூட இவருடன் நெடுநேரம் விவாதித்துக் கொண்டிருந்தேன். இவர் வெகுநேரம் வாதித்தும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், இன்று அதிகா லையில், அதோ நிற்கிறாளே, அந்தப் பெண் வந்து ஒரு செய்தி சொன்னாள். அதைக் கேட்டது என் கருத்தை மாற் றிக் கொண்டேன். தாங்கள் உடனே காஞ்சிக்குப் போக வேண்டியது அவசியம் என்று இப்போது எனக்குத் தோன் றுகிறது!" என்றார் இலங் கைச் சேநாதிபதி.

தூண் மறைவிலே நின்று தன்னைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த பூங் குழலியின் மீது இளவரசர் தம் பார்வையைச் செலுத்தி னார்.

"அபிமன்யுவை நாலாபுற மும் பகைவர்கள் தாக்கிக் கொன்றதாகக் கேள்விப்பட் டிருக்கிறேன். என்னை நாலா புறமிருந்து வரும் செய்தி களே தாக்கிக் கொன்று விடும் போலிருக்கிறது!" என்று இளவரசர் சொல்லிக் கொண்டார்.

"அந்தப் பெண் என்னதான் செய்தி கொண்டு வந்திருக் கிறாள்?" என்றார்.

"அவளே சொல்லட்டும்!" என்றார் பெரிய வேளார்.

பூங்குழலி தயங்கித் தய ங்கி நடந்து வந்தாள். இள வரசர் முன்னால் வந்து நின் றாள். நாலு பக்கமும் திரும் பிப் பார்த்தாள். சேநாதிப தியைப் பார்த்தாள் பார்த்தி பேந்திரனைப் பார்த்தாள் சற்றுத் தூரத்தில் நின்ற வந்தி யத்தேவனையும் ஆழ்வார்க்க டியானையும் பார்த்தாள். இளவரசர் முகத்தை மட்டும் அவளால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

"பெண்ணே சொல், சீக்கி ரம்!" என்றார் சேநாதிபதி. பூங்குழலி ஏதோ சொல்ல முயன்றாள். ஆனால் வார்த் தைகள் ஒன்றும் வரவில்லை.

"ஆகா! இந்த உலகமே ஊமை மயமாகி விட்டது போல் காண்கிறது" என்றார் அருள்மொழிவர்மர்.

அவ்வளவுதான் பூங்குழலி தன் கண்ணிமைகளை உயர் த்தி ஒரு தடவை, ஒரு கணத் திலும் சிறியநேரம் இளவர சரை நோக்கினாள். அதற் குள் அக்கண்களில் கண்ணீர் ததும்பி வழிய ஆரம்பித்து விட்டது. உடனே அங்கி ருந்து ஓட்டம் பிடித்தாள். ஓடிப்போய்த் தூரத்தில் அட ர்ந்து வளர்ந்திருந்த மரங்க ளுக்கிடையில் மறைந்தாள்.

எல்லாரும் வியப்புடன் அதைப்பார்த்துக் கொண்டு நின்றார்கள். வந்தியத் தேவன் முன்வந்து, "ஐயா! இவள் முன்னொரு தடவை இப்ப டித்தான் ஓடினாள். நான் தொடர்ந்து போய்ப் பிடித் துக்கொண்டு வரு கிறேன்!" என்றான்.

"அப்படியே செய்! ஆனால் அதற்குள் அவள் கொண்டு வந்த செய்தி என்ன என்பதைச் சேநாதிபதி சொல்லட்டும்!" என்றார் இளவரசர்.

அதற்குச் சேநாதிபதி, "அதை இரண்டே வார்த்தைகளில் சொல்லி விடலாம். இளவ ரசே! தங்களைச் சிறைப்ப டுத்திக் கொண்டுவருவதற் காகப் பழுவேட்டரையர் கள் இரண்டு பெரிய மரக்க லங்களையும் அவை நிறை யப் போர் வீரர்களையும் அனுப்பியிருக்கிறார்கள். மரக்கலங்கள் தொண்டை மான் ஆற்றுக் கால்வாயில் புகுந்து மறைவான இடத் திலே வந்து நிற்கின்றன!" என்றார். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தங்க சிங்கம்


ஒரு ஊருல ஒரு இள வரசி இருந்தாங்க. அவ ரொம்ப தைரியமான வளாவும் நல்லவளாவும் இருந்தா அதனால எல் லாருக்கும் அவள ரொம்ப பிடிக்கும்.

ஒருநாள் அவள பார் க்க ஒரு குட்டி பொண்ணு வந்தா, அவ இளவரசி கிட்ட சொன்னா நான் தங்க சிங்கத்த பத்தி நிறய கதை கேட்டிருக் கிறேன் என்று.

அந்த பொண்ணு தொடர்ந்து சொன்னா நான் அந்த தங்க சிங் கத்த பார்க்க போறேன் என்கூட உதவிக்கு வாங் கனு கூப்பிட்டா இளவ ரசிய.

இத கேட்ட இளவ ரசிக்கு ரொம்ப ஆர்வம் வந்துடுச்சு, உடனே இள வரசியும் அந்த குட்டி பொண்ணுகூட சேர் ந்து அந்த தங்க சிங்க த்த தேடி நடக்க ஆரம் பிச்சாங்க.

அப்ப காட்டு மிரு



கங்கள் எல்லாம் கேட் டுச்சுங்க, அப்படி அந்த தங்க சிங்கத்த பார்க்க போனா என்ன கேப்பீங் கனு கேட்டுச்சுங்க.

அதுக்கு அந்த இள வரசி சொன்னா இது வரைக்கும் அந்த தங்க சிங்கத்தை யாருமே பார் த்தது இல்லைனு சொல்லு றாங்கா. நாங்க அந்த தங்க சிங்கத்த கண்டு பிடிச்சா, அதுவே பெரிய சாதனை அதனால நாங்க அதுகிட்ட எதுவுமே கேக்க மாட்டோம்னு சொன்னாங்க.

இளவரசி சொன்ன பதில் அந்த மிருகங்க ளுக்கு ரொம்ப பிடிச்சி போச்சு, அதனால அந்த சிங்கம் இருக்குற குகை க்கு போற வழிய படம் வரைஞ்சு காமிச்சுச்சு ஒரு நரி.

அந்த வரைபடத்தை பார்த்து சுலபமா தங்க சிங்கம் இருக்குற இடத் துக்கு போனாங்க இளவ ரசியும் குட்டி பொன் னும்.

அப்ப அந்த தங்க சிங் கம் கேட்டுச்சு, எனக்கு ஒரு உதவி செய்யுங்க நான் ரொம்ப நாள் வாழ ணும்ன்னா எனக்கு மலை மேல இருக்குற ரோஜா வும், கடலுக்கு அடியில இருக்குற முத்தும், மர கத புறாவோடை இறங் கும் வேணும்னு கேட் டுச்சு.

ஏன் எதுக்குன்னு கேக் காத இளவரசி அந்த மூன்றையும் கொண்டு வர போனாங்க.

கடலுக்குள்ள இருக் குற முத்த இளவரசி நீச் சல் அடிச்சு எடுத்துட்டு வந்தா.

மரகத புறாவோடை இறக இண்டுபேரும் சேர் ந்து எடுத்தாங்க.

அடுத்ததா அந்த மலை ரோஜா ரொம்ப உய ரத்தில இருந்துச்சு, ஆனா அந்த குட்டி பொண்ணு ரொம்ப தைரியத்தோடு மேல ஏறி பறிச்சிட் டாங்க.

மூன்று பொருட்க ளையும் அந்த தங்க சிங் கத்துக்கிட்ட கொண் டுவந்து கொடுத்திட் டாங்க.

அப்பத்தான் அந்த தங்க சிங்கம் கேட்டுச்சு உங்களுக்கு நான் எதா வது கொடுக்கணும் என்ன வேணும்னு கேட்டுச்சு.

அதுக்கு அந்த குட்டி பொண்ணும் இளவர சியும் எதுவும் எங்க ளுக்கு வேண்டாம்னு சொன்னாங்க.

தன்கிட்ட வர்ற எல் லாரும் எதாவது வரம் கேட்டே வருவாங்க ஆனா நீங்க இண்டுபேரும் எதுவுமே வேணாம்னு சொல்லிடீங்க.

இந்த நல்ல குணம் இருக்குற வரைக்கும் உங்களுக்கு எல்லாமே நல்லதா நடக்கும், தொடர்ந்து நல்ல பிள் ளைகளா இருங்கனு சொல்லி வாழ்த்தி அனு ப்பிதுச்சு அந்த தங்க சிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமையான இதயமானது எப்போதும், எதையும் உறுதியுடன் ஆக்கப்பூர்வமாகவே அணுகும்!
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது இளைஞர்களிடையே ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்துங்கள்

ஒரு காலத்தில் சுகம் பற்றி வரையறை செய்த உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) ஒருவர் ஆரோக்கியமாக – நோயில்லாமல் இருந்தால் அது சுகம் எனக் கருதியது.

எனினும் ஒருவர் உடல் ரீதியாக நோயில்லாமல் இருப்பது மட்டும் சுகமாகிவிட முடியுமா? என்று சிந்தித்த அந்த அமைப்பு; உளமும் சுகமாக இருக்க வேண்டும் எனக் கருதியது.

உடல், உள ரீதியில் ஒருவர் நன்னிலையில் இருப்பதை மட்டும் சுகம் என்று வரையறை செய்வதில் அந்த அமைப்புக்குத் திருப்தி ஏற்படவில்லை.

இதன் காரணமாக பின்னாளில் சமூக சுகத்தை சுகத்துக்கான வரையறையில் உள்வாங்கிக் கொண்டது.

ஆக, ஒருவர் உடல், உள, சமூக நிலைகளில் நன்றாக இருப்பாராயின் அதுவே சுகம் என வரையறை செய்த டபிள்யூ.எச்.ஓ, சுகத்துக்கான தனது வரைவிலக்கணத்தில் ஏதோ குறைபாடு இருப்பதை உணர்ந்து கொண்டது.

இங்குதான் ஆன்ம சுகம் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் சிந்திக்கிறது.

அந்தச் சிந்தனை சுகத்துக்கான முழுமையான வரைவிலக்கணத்தைத் தருகிறது.

ஆம், சுகத்துக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் சமகால வரைவிலக்கணம் என்பது, ஒருவர் உடல், உள, சமூக, ஆன்மீக நிலைகளில் நன்றாக இருப்பது என்றாயிற்று.

இங்குதான் ஆன்ம சுகம் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆன்ம சுகம் பற்றிச் சிந்திக்கும்போது, ஒருவரிடம் ஆன்ம சுகம் ஏற்பட்டுவிட்டால், உடல், உள, சமூக சுகம் தானாக ஏற்பட்டுவிடும் என்ற மெய்ம்மையை உணர முடியும்.

ஆம், நாளை வெள்ளிக்கிழமை மஹா சிவராத்திரி விரதம். சிவராத்திரி விரதத்தின் மகிமையை உணர்ந்து கொண்டவர்கள் அந்த நாளை அவமே கழிக்காமல் தவமாகப் போற்றுவர்.

சிவராத்திரி விரதத்தை மனம், வாக்கு, காயம் எனும் திரிகரண சுத்தியோடு அனுஷ்டித்தால், சிவப்பரம்பொருளின் அருளாட்சி நிச்சயம் நம்மை வந்தடையும்.

இருந்தும் நம்மில் பலர் திரைப்படங்களைப் பார்ப்பதிலும் முகநூலில் நேரத்தைச் செலவிடுவதிலும் தொலைபேசி உரையாடல்களுடன் காலத்தைக் கழிப்பதுமாக அருமந்த சிவ விரதத்தை அவமாக்குகின்றனர்.

அதிலும் சில இளைஞர்கள் சிவராத்திரி விரதத்தை தீபாவளிக் கலாசாரமாக மாற்றி விடுகின்றனர். இதுதான் மிகப்பெரும் அபத்தம்.

உண்மையில் சிவராத்திரி விரத நாளில் மதுபானச்சாலைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றைப் பூட்டி சிவவிரதத்தை புனிதமாக அனுஷ்டிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

என்ன செய்வது நாங்கள் சைவர்கள் என்பதால், எங்கள் விடயத்தில் எவரும் எதுவும் செய்ய மாட்டார்கள்.

எனவே நாம் நாமாக உணர்ந்து, நாளை நடைபெறும் சிவராத்திரி விரதத்தை பக்தி முக்தியாக அனுஷ்டித்து சிவனருளைப் பெற்று நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்போம்.

இதற்காக எங்கள் மாணவர்களை, இளைஞர்களை வழிப்படுத்தி அவர்களிடம் ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். ஆன்ம சுகம் ஏற்பட்டுவிட்டால், எல்லா உயர் பண்புகளும் தானாக வந்து சேரும். இது சத்தியம்.

# நாட்டை சீரழித்த ராஜபக்சக்களை ஜனாதிபதி ரணிலே பாதுகாக்கிறார்

## எதிர்க்கட்சி தலைவர் காட்டம்

வீழ்ச்சியடைந்த நாட்டை பாதுகாக்க யாரும் முன்வராத நிலையில் தான் அந்த நெருப்பு பிழம்பில் குதித்ததாக ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் அவர் நெருப்பு பிழம்பில் குதிக்கவில்லை மாறாக திருடர்கள் குழுவில் குதித்துள்ளார். அவர் நாட்டை வீழ்ச்சியடையச் செய்தவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சபையில் ஆற்றிய உரையில் புத்தரின் உன்னத வார்த்தைகளை பிரயோகித்து அவரது தொலைநோக்கு பயணத்தை நனவாக்க பெரும் முயற்சியை மேற்கொண்டார். தொங்கு பாலம் குறித்து பேசிய ஜனாதிபதி வங்குரோத்து நிலையை ஏற்படுத்தியவர்களை பாதுகாத்து வருகிறார்.

நாட்டில் வங்குரோத்து நிலையை ஏற்படுத்திய பேரழிவை உருவாக்கியவர்களிடமிருந்து நாட்டு மக்களுக்கு நட்டஈடு பெறுவதற்கான வசதிகளைக்கூட தற்போதைய ஜனாதிபதியே நிறுத்தியுள்ளார்.

பேரழிவை உருவாக்கிய தலைவர்கள் திருடிய சொத்துக்களையும் இந்த ஜனாதிபதியே பாதுகாத்து வருகிறார். நாட்டை சீரழித்த ராஜபக்ஷக்கள் அந்த தொங்குபாலத்தில் மேலே வர உதவுபவரும் ஜனாதிபதியாகும். அதனால் ஜனாதிபதியின் செயற்பாடுகளால் 220 இலட்சம் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் மூலம் ஒடுக்குமுறைகளை செய்ய முயற்சிக்கிறார்.

அத்துடன் ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவையை நிறைவேற்றுத் துறையின் பொம்மையாக மாற்ற முயற்சிக்கிறார். சபாநாயகருடன் இணைந்து அரசியலமைப்பை சீர்குலைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எந்த கருத்தும் இப்போது கூறுவதில்லை. தொங்கு பாலத்தில் ஏறி மேலே வந்தவர்கள் நாட்டை சீர்குலைத்த ராஜபக்ஷ குழுக்களே ஆகும்.

எவ்வாறாயினும் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை ஐக்கிய மக்கள் சக்தி தயாரித்துள்ளது. பொருளாதார முன்னேற்றம் தொடர்பான வேலைத்திட்டத்தையே எதிர் பார்த்துள்ளோம். அனைவரையும் இணைத்துக்கொண்ட தேசிய அபிவிருத்தி திட்டத்தை எமது அரசாங்கத்தில் நாங்கள் ஏற்படுத்துவோம் என்றார். (ம-7,10)

### குறைபாடுகளுடன் அனுமதியின்றி இயங்கிய

# வல்லை முதியோர் இல்லத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## வடக்கு மாகாண ஆளுநர் அதிரடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் எவ்வித அனுமதியும் இன்றி செயற்படும் முதியோர் இல்லத்தின் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விடுத்த பணிப்புரைக்கு அமைய, ஆளுநரின் செயலாளரால் பருத்தித்துறை பிரதேச செயலாளருக்கு கடிதம் ஊடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வல்வை முதியோர் இல்லம் எவ்வித வசதிகளும் இன்றியும் இதுவரை பதிவு செய்யாமலும் இயங்கியமை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வல்வை முதியோர் இல்லம் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் "அபயம்" 24 மணித்தியால குறை கேள் வலையமைப்பிற்கு கிடைத்த முறைப்பாடு தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட கள விஜய அறிக்கை ஆளுநரிடம் சமர்பிக்கப்பட்டது.

விடயங்களை ஆராய்ந்த வடக்கு மாகாண ஆளுநர் குறித்த முதியோர் இல்லம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். (ம-7,10)

# கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது

பளை மாசர் பகுதியில் மூன்றரை கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சூட்சுமமான முறையில் மறைத்து போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து வெற்றிலைக்கேணி கடற்படையுடன் இணைந்து அதிரடிப்படையினர் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு குறித்த இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் உடுத்துறை பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இளைஞன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7,10)

# மின்மானி வாசிப்பவரின் மோ.சைக்கிள் திருட்டு

## சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டுவில் வீதிப் பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் மின்மானி வாசிப்பவரின் மோட்டார் சைக்கிள் திருட்டுப்போயிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மின்சாரசபை ஊழியர் மின்பட்டியல் கணக்கிடும் பொருட்டு கண்டுவில் வீதியில் மோட்டார்சைக்கிளை நிறுத்தி விட்டு வீடு ஒன்றிற்குள் சென்ற சமயத்தில் மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,10,30)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூ ரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 7 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இப் போட்டியானது கல்லூரி அதிபர் திருமதி. லலி. தாமலர் முகுந்தன் தலைமையில் இடம் பெறுவ தோடு, பிரதம விருந்தின ராக மன்னார் மாவட்ட செயலக, மாவட்ட செயலர் கனகசபாபதி கனகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தென் மராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் முத்துலிங்கம் ஜெகதாசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# மஹா சிவராத்திரி

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் மஹாசிவராத்திரியை முன்னிட்டு 08.03.2024 வெள்ளிக்கிழமை இரவு நான்கு ஜாமமும் விஷேட பூஜைகள் நடைபெறும் பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறியத்தருகிறார்.

(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

16



அட்டவணையின் நடுவில் தமிழில் எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. இரண்டு பக்கங்களில் வட்டெழுத்துகளும் தமிழ் எழுத்துகளும் நூற்றாண்டு வாரியாக வளர்ந்த முறை குறிப்பிடப்பட்டுள்ளது.







### கிரந்த எழுத்துமுறை தோற்றமும் வளர்ச்சியும் முடிவும்

தமிழ் மொழி எழுத்துக்களைப் பாவித்து வடமொழி (சமஸ்கிருதம்) எழுத முடியாது. ஆனால் மலையாளம், கன்னடம், தெலுங்கு, சிங்களம் போன்ற மொழிகளின் எழுத்துக்களைக் கொண்டு வடமொழிஃபாளி மொழிகளை எழுதலாம். தமிழ் நாட்டில் வடமொழியை எழுதுவதற்காக உருவாக்கப்பட்டதே கிரந்த எழுத்துக்கள் (ஸ,ஷ,ஜ,ஹ போன்றவை) ஆகும்.

கிரந்த எழுத்து முறை கி.பி ஐந்தாம் நூற்றாண்டுகளில் பிராமி எழுத்து முறையிலிருந்து தோன்றியிருக்கக் கூடுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வட இந்தியாவில் பிராமி எழுத்துமுறை நாகரி எழுத்துமுறையாக திரிந்த வேளையில், தென்னிந்தியாவில பிராமி எழுத்து முறை கிரந்த எழுத்து முறையாக திரிந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

கிரந்தத்தில் இருந்து இக்காலத் தமிழ் எழுத்துக்கள் தோன்றியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால் தமிழ் அறிஞர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர். தென்னகத்தில் இருந்த வடமொழிப் பண்டிதர்கள், வடமொழியை எழுவதற்காக அப்போது வழக்கிலிருந்த தமிழ் எழுத்துக்களில் சிறு சிறு மாற்றங்களை செய்தனர் என்றும், இதன் விளைவாகவே கிரந்த எழுத்து முறை தோன்றியிருக்க வேண்டு மென்று கருதுகின்றனர். ஆகவே அக்கால தமிழ் எழுத்து முறையின் நீட்சியேகிரந்தம் என்று கூறுகின்றனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடமொழி கிரந்த எழுத்திலேயே எழுதப்பட்டு வந்தது. தென்னிந்தியா முழுவதும் கிரந்த எழுத்து முறை பரவியிருந்தது. தமிழகத்தில் மணிப்பவளம் (மணிப்பிரவாளம் என்பது தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்பட்ட மொழி நடையாகும்) எழுதவும் கிரந்தம் பயன்படுத்தப்பட்டது. தமிழ்ச் சொற்களை வட்டெழுத்திலும் வட மொழிச் சொற்களைக் கிரந்தத்திலும் எழுதினர்.

பல்லவர்கள் தமிழையும், வடமொழியையும் ஒருங்கே போற்றினர். பல்லவர்கள் காலத்தில் தான் கிரந்தம் எழுச்சியுடன் திகழ்ந்தது. பல்லவ மன்னர்களின் செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் இவ்வகை எழுத்துக்கள் காணப்படுகின்றன. சமணர்கள் இவ்வெழுத்து முறையை பயன்படுத்தி, ஸ்ரீ புராணம், ஸ்ரீமாக நந்தி,பர்மாகமம் ஆகியவைகளை உருவாகியுள்ளனர். வைணவ பெரியார்கள் திருவாய்மொழி பாடல்களுக்கு விரிவுரையும், வியாக்கியானங்களையும் கிரந்த எழுத்துக்களாலேயே எழுதி இருக்கிறார்கள்.


தமிழக மன்னர்கள், தென்-கிழக்காசிய நாடுகள் மீதுபடையெடுத்ததின் விளைவாக, அங்கும் கிரந்தம் பரவியது. பர்மியமொழி, தாய் (Thai) மொழி, கெமர் (Khmer) மொழி முதலிய மொழிகளின் எழுத்து முறை கிரந்ததிலிருந்தே தோன்றியவையாகும். சிங்கள எழுத்து முறையும் கிரந்த எழுத்து முறையிலிருந்து தோன்றியதே ஆகும்.


தமிழகத்தில் வடமொழியாதிக்கத்தின் வீழ்ச்சியையடுத்து கிரந்த எழுத்து முறையும் வீழ்ச்சி அடைந்தது. இருப்பினும்கி.பி 19ஆம் நூற்றாண்டு வரையிலும் கூட தமிழகத்தில் வடமொழியினைக் கிரந்த எழுத்துக்களிலேயே எழுதினர். பின்னர் கிரந்த எழுத்து முறை முற்றிலும் மறைந்து தமிழகத்தில் வடமொழி தேவநாகரியில் எழுதத் தொடங்கப்பட்டது. இருப்பினும் சில வேத பாடசாலைகளில் கிரந்தம் கற்பிக்கப்படுகின்றது.

தமிழைப் பொருத்தவரையில் மணிப்பவள எழுத்து நடை மறைந்தாலும், "ஸ", "ஜ", "க்ஷ", "ஷ" ,"ஸ்ரீ", "ஹ" போன்ற கிரந்த எழுத்துகள் வட மொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் உச்சரிப்புக்கு ஏற்ப குறிக்க இன்றும் பயன்படுத்தப் படுகின்றன. இவை தற்போதும் தமிழ் எழுத்துக்களுடன் சேர்த்து எழுதப்படுவதைக் காணலாம் ஆனால் இவை தவிர்க்கப்பட வேண்டு மென்பதே தமிழ் அறிஞர்களின் கருத்தாகும். இவை வெறும் 6 எழுத்துக்களே என எண்ணிவிட வேண்டாம். இவை பிற எழுத்துக்களுடன் சேர்ந்து மேலும் பலவாகப் பெருகும். உதாரணமாக ஸா,ஸி,ஸ/..., ஷா,ஷி,ஷீ... என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவையெல்லாம் சேர்ந்தால் தமிழில் எத்தனை எழுத்துக்கள், எண்ணிப்பாருங்கள். தனது மொழியில் இல்லாத எழுத்து களைப் பயன்படுத்தும் நிலை தமிழல்லாமல் வேறு எந்த மொழிக் கும் கிடையாது. தமிழ் மற்றும் கிரந்த உயிர் எழுத்துக்கள் உரு -ய யில் காட்டப்பட்டுள்ளன. தமிழில் உயிரெழுத்து இல்லாத கிரந்த எழுத்துக்கள் உரு-டி யில் காட்டப்பட்டுள்ளன. ஏ மற்றும் ஓ வுக்கு கிரந்த எழுத்துக்கள் இல்லாதபோதும் மலையாளம் மற்றும் சிங்களத்தில் எழுத்துக்கள் உண்டு.

(தொடரும்....)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக் கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத் தும் நோக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

தென்னிந்தியாவை இலங்கையுடன் இணைக்கும் முக்கிய திட்டங்களாக எண்ணெய்க் குழாய் அமைப்பு, திரவ மாக்கப்பட்ட இயற்கை எரிவாயு(எல்என்ஜி) விநியோகத் திட்டங்கள் உள்ளன.

திரவமாக்கப்பட்ட இயற்கை எரி வாயு விநியோகத் திட்டத்தின் பிரதான இலக்கு அநுராதபுரத்தையும் சென்னை யையும் நேரடியாக இணைப்பதாகும்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்தை எரிசக்தி மைய் மாக அபிவிருத்தி செய்வதற்கு அர சாங்கம் திட்டமிட்டுள்ளதுடன் இதற் கான இந்திய முதலீடுகளை பயன் படுத்த உள்ளது.

இந்த எண்ணெய்த் தாங்கித் தொகு தியை ஐ.ஓ.சி. நிறுவனத்துடன் கூட்டு தொழில் முயற்சியாக அரசாங்கம் மேம்படுத்தி வருகிறது என்றார்.(ம-7,10)

தன நிதானய
திகதி - 2024.03.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1441
E 05 22 42 65 E
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance 18574
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மஹஜன சம்பத
திகதி 2024/03/06
சீட்டிழுப்பு இலக்கம் 5411
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
U 4 4 2 0 8 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1759
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
K 26 17 24 26 47
Double Chance 85283
தொலைபேசி: 0112-670662, 0114-607000
இணையம்: www.nlb.lk

லக்கி 7 VIP
திகதி 2024.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 0237
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | L7 எழுத்து
S 1 7 1 6 6 2 S
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3653
சீட்டிழுப்பு திகதி | 06.03.2024
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Q 06 07 15 71
Q 87447
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 0720
வெற்றி இலக்கங்கள்
கடகம் 01 04 60 61 கடகம்
தன யோக இலக்கம் 29740 | தேசிய லொத்தர் சபை | 25

## யாழ்.இந்தியத்...

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திற்கு நேற்று விஜயம் செய்தார்.

இதன்போது யாழ்ப்பாணப் பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரி யர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

பல்கலைக்கழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த முன்மொழிவுகள் உட்பட கல்வித்துறையில் கூட்டுத் திட் டங்கள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணி யம் ரகுராம், இந்து கற்கைகள் பீட பீடா திபதி ச.பத்மநாதன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (ம-7,10,33)

## சாதாரண...

வதன் ஊடாக அரச பல்கலைக்கழகத் திற்குப்பிரவேசிக்கும்நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து ஆரா யப்படவுள்ளது.

கல்விக் கொள்கை கட்டமைப்பிற்குள் இந்த விடயம் காணப்படுகிறது. எதிர் வரும் நாட்களில் நடைபெறும் கல்வி தொடர்பான கண்காணிப்புக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எட்டப்படும்.

தனியார் பல்கலைக்கழகங்கள் இவ்வாறான நடைமுறைகளை பின் பற்றுகின்றன. அதனூடாக மாணவர் களுக்கு கல்விக்கான கால எல்லையை முகாமைத்துவம் செய்து கொள்ள முடி யும் எனவும் அவர் கூறியுள்ளார். (ம-7,10)

## தமிழர்களுக்கு...

தும் சர்வதேசம்தலையிட வேண்டுமென கோரிவருவதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக் கில் விடுதலையாகியுள்ள ஏனைய 3 இலங்கையர்களுக்கேனும் நாடு திரும்பு வதற்கு இலங்கையும் இந்தியாவும் வழிவகைகளை செய்ய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

## தர்மபுரியில்...

றது.

தர்மபுரி மாவட்ட ஆட்சியாளர் தலை மையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, 8 கோடியே 40 இலட் சம் இந்திய ரூபாய் மதிப்பிலான புதிய வீடுகள் சிறுபான்மை, வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் பன்னீர்செல்வம் ஆகியோ ரால் கையளிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு வட் டத்தில் வசிக்கும் 80 பயனாளிகளுக் கும் நல்லம்பள்ளி ஒன்றியத்தின் பூவல் மடுவு இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் 88 பயனாளிகளுக்கும் புதிய வீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மக்களவை, சட்ட மன்றம், உள்ளாட்சி அமைப்பு உறுப் பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,10)

## பொலிஸார் மீது...

நபர்களே, அதனைத் தடுக்க வந்த பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி விட் டுத் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மணல் கடத்தலுக் குப் பயன்படுத்திய டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றிய பொலிஸார் இது குறித்த மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (ம-7,10)

## காற்றின்...

எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் காற்றின் தரக் குறி யீட்டின்படி, நேற்று கொழும்பின் காற்று மாசு 127 ஆக பதிவாகியுள்ளது.

இந்நிலை உணர்திறன் உள்ளவர் களின் ஆரோக்கியத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காலி கராப்பிட்டியில் 90 ஆகவும், புத்தளத்தில் 88 ஆகவும், குருநாகல் மற்றும் அநுராதபுரத்தில் 86 ஆகவும் காற்று மாசு சுட்டெண் பதி வாகியுள்ளது. (ம-7,10)

## 24...

வரி, சமூக அற வீட்டு வரி உள் ளிட்ட வரிச் சட்ட மூலம் மீதான இரண்டாம் மதிப் பீடு மீதான விவா தம் இடம்பெற் றது. இதன்போது பெறுமதிசேர் வரி சட்டமூலத்துக்கு சபை அனுமதி வழங்குகிறதா? என சபாநாயகர் வினவியபோது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் எரான் விக்கிரம ரத்ன வாக்கெடுப் பைக் கோரினார்.

அதன் பிரகா ரம் வாக்களிப்பு கோரப்பட்டபோது பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்ட மூலத்துக்கு ஆதர வாக 59 வாக்கு களும், எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 24 மேலதிக வாக் குகளால் சட்ட மூலம் நிறைவேற் றப்பட்டது. (ம-7,10)

## ஆட்சி...

"ஜனாதிபதிப் பதவியிலிருந்து என்னை வெளி யேற்றும் சதி" என்ற பெயரில் இன்று வெளி யிடப்படவுள்ள தனது நூலில் இந்த உண்மை களை வெளிக் கொணரவுள்ள தாக முன்னாள் ஜனாதிபதி விடுத் துள்ள அறிக்கை யில் குறிப்பிடப் பட்டுள்ளது.

நாடு சுதந்திர மடைந்தது முதல் 60 வருடங்களுக்குள் ஒருபோதும் அனுபவித்திராத வகையில், இன்று நாட்டிற்குள் சர்வதேச தலையீடுகள் காணப்படுவதாகவும் உள்ளக அரசி யலை வெளித்தரப்பினர் கையாள்வ தாகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிப் பதவியில் இருந்து தன்னை அகற்றும் அரசியல் இயக்கம், சுதந்திரம் கிடைக்கப்பெற்ற பின்னர் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அமைதியான அதிகாரப் பரிமாற்றங் களை மாத்திரம் அனுபவித்திருந்த இலங்கை அரசியலுக்குப் புதிய பரி மாணத்தை இணைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவம் இந்நாட்டின் அரசியல் எதிர்காலத்திற்கு பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத் தும் விடயம் என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச அனுசரணையுடன் ஆட் சியை மாற்றும்செயற்றிட்டம்தொடர்பிலான நேரடி அனுபவமே இன்று வெளியிடப் படவுள்ள தனது நூலில் உள்ளடக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (ம-7,10)

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.03.2024 | வெற்றி வாரம் 119 | வர்ணம் பச்சை
ஆங்கில எழுத்து | மற்றும் வெற்றி இலக்கம்
U 6 8 9 0 4 8
W
சுப்பர் ஜக்பொட் ரூ. 30,553,944.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2385 | வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 06.03.2024 | தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள்
01 14 17 27 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,611,558.40
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 2024.03.06 | வெற்றி வாரம் 4546 | வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்
36 44 54 68 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,071,638.80
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4097 | வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.03.06 | தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 14 31 59 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,787,469.60
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 17 37 41 62 65
சுப்பர் இலக்கம்
1561
வெளிர் நீலம்
06.03.2024
புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 510,198,982.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.03.06 | வெற்றி வாரம் 2006 | வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
46 48 55 57 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,350,954.80
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2211
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2024.03.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.96,700,218.40
வெற்றி இலக்கங்கள்
12 13 27 43 B
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canada & UK Visa

சகல ஆவணங்களும்
சட்ட வல்லுனர்
ஆலோசனையுடன்
செய்து கொடுக்கப்படும்.
முறையான ஆவணங்கள்
இல்லாதவர்களுக்கும்
நாம் பெற்றுக்கொடுப்போம்.

**எமக்கு 20 வருட அனுபவம்**

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road,
Jaffna.

021 222 5686
071 415 0995
021 435 5113

(19377)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-8485,19361)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503

(19118)

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
0044 7578 626565
077 251 9150
Email add: rajasasikumar@gmail.com

(19217)

## மகா சிவராத்திரி - 08.03.2024

சிவனடியார்களே எமது ஆலயத்தில், ஆதிசிவன் ஆலயம் தொல்புரம்(பூதராசி அம்மன் பின்புறம்) சிவராத்திரி விழா மக்கள் வழிபாட்டு முறையில் நடைபெறும்.
அனைவரும் வருக

தொடர்புகளுக்கு
077 614 0849, 074 369 2974

(19363)

## காணிகள், வீடுகள் வாங்க, விற்க

எம்மிடம் காணிகள், வீடுகள் விற்பனைக்கு உண்டு. நீங்கள் காணிகள், வீடுகள் விற்பதற்கும் வாங்குவதற்கும் நம்பிக்கையாக எம்மை நாடுங்கள். வடமாகாணம், கொழும்பு போன்ற பிரதேசங்களில் இருந்தும் எம்மைத் தொடர்பு கொள்ளலாம். தரகர்கள் மட்டும் தொடர்புகொள்ளத் தேவையில்லை.

**Easy Real Estate**
076 742 4301, 075 710 9639 Whatsapp
வெளிநாடு - 0094757109639 - Whatsapp

(19360)




இவ்வருடம் 50வது பிறந்தநாள் கொண்டாடும் 93ம் ஆண்டு A/L மாணவர்கள்
அனைவருக்கும் எமது இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:- யாழ்.பரியோவான் கல்லூரி
93ஆம் ஆண்டு A/L மாணவர்கள்

(C-8481)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org